
# மறைப்பணி புரிந்த மாமேதை



...லை அன்புராசா

JPL
C5551

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைப்பணி புரிந்த மாமேதை

131270

பொதுசன நூலகம்
24 OCT 2001
யாழ்ப்பாணம்

செபமாலை அன்புராசா

அமலமரித் தியாகிகள்
வெளியீடு
2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல்** : மறைப்பணி புரிந்த மாமேதை

**எழுதியவர் ©** : செபமாலை அன்புராசா

**முதற் பதிப்பு** : ஐப்பசி 2001

**வெளியீடு** : அமலமரித் தியாகிகள்
யாழ். மாகாணம்

**மொழி** : தமிழ்

**பொருள்** : வரலாறு

**பக்கங்கள்** : 47

**அச்சிட்டோர்** : புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்

24 OCT 2001

922.945


முதல்வரின் அனுமதி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மறைப்பணி புரிந்த மாமேதை

## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், அ.ம.தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அர்ப்பணம்

எந்த மக்களுக்காக சுவாமி ஞானப்பிரகாசர்

தன்னை அர்ப்பணித்தாரோ

அந்த மக்கள் ஆறுதல் அடைய

அவர்கள் பாதத்தில்

இந்த மலரை அன்போடு

அர்ப்பணம் செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

தோன்றிற் புகழொடு தோன்றுக . . . என்னும் வள்ளுவரின் கூற்று இவ்வுலகில் தோன்றும் எல்லா மனிதருக்கும் பொருத்தமல்ல. எமது தமிழ் சமுதாயத்தில் தோன்றிய பெரியார்களுள் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஒரு தனி இடத்தை பெற்றுள்ளார் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மையாகும். இவர் தமிழுக்கும் சமயத்திற்கும் அளப்பெரும் தொண்டு புரிந்து தமது தோன்றுதலால் புகழ் தேடியுள்ளார். வரலாற்றில் தோன்றும் மாமனிதர்களது வாழ்க்கையையும், அவர்கள் ஆற்றிய பணிகளையும் காலத்தால் அழியவிடாது பரம்பரை பரம்பரையாக அறிந்தவர் அறியாதவருக்கு சொல்லிக் கொடுத்தல் தமிழ் பண்பாட்டின் நல்லதொரு மரபாகும்.

இதன்வழி அருட்தந்தை செபமாலை அன்புராசா அவர்கள் தமது உள்ளத்தைத் தொட்ட அமல மரித் தியாகி சுவாமி ஞானப் பிரகாசர் அடிகளார் மட்டில் தமது கவனத்தை திருப்பி உள்ளார். சுவாமிகளது வாழ்வின் உயர் பண்புகளையும், அவர் சிந்தனையில் எழுந்த இலக்கியங்களையும் கூர்ந்து நோக்கும் அன்புராசா அவர்கள் தமது சிந்தனைகளையும், அவதானிப்புக்களையும் சேர்த்து நூல் வடிவில் தொகுத்து நல்ல தொரு சேவை புரிந்துள்ளார்.

சுவாமி ஞானப்பிரகாசரது ஆளுமைக்கும், அவரது நினைவிற் கும் இந்நூல்வழி உயிர் ஊட்டம் அளித்துள்ளார். தமது நூலில் வழங்கும் குறள் போன்ற உபதலைப்புக்கள் ஊடாக சுவாமி ஞானப்பிரகாசரது ஆளுமையை செதுக்கி, அவரது உயர் பண்பு களை துலங்க வைக்கின்றார். அவரது வரலாற்றுக் குறிப்புக்களை சுவைபட இலகு தமிழில் எழுதி இக்கால இளம் சந்ததியினர் சுவாமியினது வீர செயல்களை கண்டுகொள்ள வழிசமைத்துக் கொடுக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஒரு தலை சிறந்த மறை பரப்பாளர் ஆவார். அவரது போதனையை கேட்டவர், அதனால் இயேசுக் கிறிஸ்துவின் மீட்பை சந்தித்தவர்கள், சுவாமிகளது வழித் தோன்றல்களாக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் இவ்வுண்மைக்கு சான்று பகர்வர். இப்படிப்பட்ட மக்களது அனுபவ எண்ணங்களை வாசித்தும், கேட்டும் அறிந்த அன்புராசா அவர்கள் அவை எல்லாவற்றையும் தொகுத்து நூல் உருவில் கொடுக்கும் நன் முயற்சியை மிகவும் பாராட்டுகின்றேன்.

தம் மறையையும், மக்களையும் மிகவும் அன்பு செய்தவரும் தம் அர்ப்பணத்தால் பலரது வாழ்வில் ஒளி ஏற்றியவருமான அமல மரித் தியாகி சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளார் இந்நூலின்வழி மென்மேலும் பலராலும் அறியப்பட ஆசிக்கின்றேன். இளம் எழுத்தாளர் அருள்பணி அன்புராசா அவர்கள் தமது எழுத்துத் துறையில் வளர்ந்து, மறைக்கும் மக்களுக்கும் சேவையைத் தொடர இதயபூர்வ ஆசிகள் கூறிநிற்கின்றேன்.

*அ. ஜீவேந்திரா போல், அ.ம.தி.*
தலைவர்,
அமல மரித் தியாகிகள்
யாழ். மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மறைப்பணி புரிந்த மாமேதை என்னும் தலைப்பில் வணக்கத் துக்குரிய அன்புராசா அடிகளார் சுவாமி ஞானப்பிரகாசரின் பன்முக ஆளுமையை விளக்கி இச்சிறு நூலை எழுதியுள்ளார்.

மறைக்கல்வியை வரன்முறையாகப் பெற்ற இந்நூலாசிரியர் கலை இலக்கியப் பாரம்பரியம் மிக்க குடும்பத்திலே பிறந்தவர். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் ஆற்றலும், ஆளுமை யும் மிக்க இவரது தந்தையாருக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றிலே முக்கியமானதோர் இடமுண்டு. வாழையடி வாழையாக வந்த தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தின் ஊற்றுக்களையும், ஓட்டங் களையும் இந் நூலாசிரியரிடத்தே நன்கு காணமுடிகின்றது.

அன்பு தழுவிய பேச்சும், அருள்நிறைந்த சுபாவமும் உடைய இந் நூலாசிரியரின் பணிவு எல்லோரையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தது.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப் பகுதியில் ஒப்பாரும் மிக்காருமற்றுத் திகழ்ந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளைத் தமிழ் வாசகர்களுக்குத் துல்லியமாக அறியத் தந்தவர் 'அமுது' என அழைக்கப்படும் வித்துவான் அடைக்கலமுத்து ஆவார்.

அவரின் பணியின் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் மறைப்பணி புரிந்த மாமேதை என்னும் இந்நூல் அமைகின்றது. இந்நூலை ஆக்கித்தந்த அடிகளார் போற்றுதலுக்குரியவர்.

இந்நூல் மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டதாக அமை கின்றது. ஒவ்வொரு பகுதியினுள்ளும் உப பகுப்புக்கள் வகுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுச் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆளுமையை வெளிக்கொணர ஆசிரியர் முயன்றிருக்கின்றார்.

இலகுவான மொழிநடையிலே, சாதாரண வாசகனுக்குரியதாக இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. ஒரு சிறுகதையைப் படிப்பது போன்ற 'லேசான' தன்மையுடன் ஆசிரியர் இதனை எழுதியுள்ளமை பாராட்டிற்குரியது.

பல்பரிமாண ஆளுமைமிக்க சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளை இரண்டு தளத்திலே ஆராயலாம். ஒன்று அவரது ஆய்வு நோக்கு, அவர் ஆய்வு செய்த விடயங்கள், அவரது ஆய்வு முடிவுகள், அவற்றின் இக்கால நிலை முதலானவை. இவை ஆய்வாளர்களுக்கு உரியவை. இவற்றிலே கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் தோன்றலாம்.

மற்றையது, சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வு, அவரது பன்முகப் பணிகள், அவரது திருமறைத் தொண்டு, இவற்றிற்கான பின்னணி முதலானவை. இவற்றிலே கருத்து வேறுபாடு காண்பது கடினம். இன்றைய இளம் தலைமுறையினருக்கு சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளையும், பண்புகளையும் தெரியப்படுத்த வேண்டியதொரு 'காலத்' தேவை உள்ளது. இத்தேவையை நன்கு உணர்ந்த அடிகளார் இரண்டாவது தளத்தில் நின்றே இந்நூலை எழுதியுள்ளார்.

வளரும் பயிரான இந்நூலாசிரியரின் கலை இலக்கியப் பணிகள் தொடர வாழ்த்துகின்றோம்.

*கலாநிதி எஸ். சிவலிங்கராஜா*
தலைவர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சுவாமி ஞானப்பிரகாசரின் சரிதை பற்றிய இந்நூலினை வாசிக்க நேர்ந்தது. இந்த நூலிலே அவரது வரலாறு, செயற்றிறன், ஆன்மீகத்தில் கொண்ட ஈடுபாடு, அவரது கல்வித்திறமை, அவரது ஆற்றல்கள் என்பன அழகாகவும், அர்த்தமுள்ளதாகவும் எழுதப்பட்டுள்ளன.

இவர் ஓர் அமல மரித் துறவியாக இருந்தும், ஒரு பன்மொழிப் புலவராக, பலகலை விற்பன்னராக, பலவித ஆற்றல்கள் கொண்டவராக, விளங்கினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது பணி வாழ்விலே இவரது பிரசங்கங்கள் கொஞ்சம் வித்தியாசமாக ~ தர்க்கம் நிறைந்ததாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. எனவே இவர் ஒரு வித்தியாசமான, தனித்துவமான மனிதர். சாதாரணமாக மனிதர் என்று சொல்வதிலும் மாமனிதர் என்றே சொல்லவேண்டும்.

அது மட்டுமல்ல சமயத்தோடு, தமிழில் பற்றுக் கொண்டு தமிழையும் வளர்த்த பெரியார். வரலாற்று நாயகனாக விளங்கி, வாழ்வோடு அறிவியலையும் இணைத்து வளம் பல கண்டவர். திருமறையின் காவலனாக மட்டுமல்ல தீந்தமிழின் அறிஞராகவும் தேசத்திற்கெல்லாம் அறிவொளியாகவும் விளங்கினார் என்பது இந்த நூலின் மூலம் தெரிகிறது.

இன்றைய இளைய சமுதாயத்திற்கு இந்த நூல் ஒரு வழிகாட்டி. எத்தனையோ விடயங்களை அறியவேண்டிய இளைய சமுதாயத்திற்கு இந்த நூல் ஓர் ஒளிவிளக்கு. இதன் மூலம் நாம் எப்படி வாழ வேண்டும், என்னென்ன செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும், எதில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பன போன்ற உண்மைகளை இந்த நூல் உணர்த்துகிறது.

இலகுவான நடையிலே, இனிமைத் தமிழிலே இன்நூல் ஆக்கியிருப்பது ஆசிரியரின் எழுத்தாற்றலை ஒரு படி மேலே உயர்த்துகின்றது. எழுத்திலே ஒருவித புதுமையைக் காண முடிகின்றது. எம் சிந்தனையைத் தூண்டவல்ல ஆசிரியரின் ஆழமான எண்ணங்களும், கருத்துக்களும் தனித்துவமானவை.

எனவே, இதனை ஆக்கிய ஆசிரியரை வாழ்த்துவதோடு, இதுபோன்ற இன்னும் பல ஆக்கங்கள், நூல்கள் வெளியிடப் படவேண்டும்; இளைய தலைமுறையினர் இப்படியான நூல்களை அறிய வேண்டும் ~ நன்மை பெறவேண்டும் என வாழ்த்து வதோடு இறைவன் இவரது முயற்சிகளுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

5551
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

*கலாபூஷணம் செபமாலை குழந்தை*
புனித யாகப்பர் கோவிலடி
முருங்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி. அவர்களின் வாழ்வையும், பணியையும் பற்றி திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலையில் நினைவுரையாற்ற 22.01.2001 அன்று அழைக்கப்பட்டேன்.

அதற்காகச் சில நூல்களைப் புரட்ட வேண்டியிருந்தது. படித்த போது இவர் வாழ்வையும், பணியையும், வரலாற்றையும் அறிந்து அதிசயித்தேன். அவருடைய எண்ணங்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவருடைய எழுத்துக்கள் இன்றும், அவர் இறந்து ஐம்பத்தி னான்கு (54) வருடங்களின் பின்னரும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்தேன்.

அழைக்கப் பெற்ற பணியை அன்று (22.01.2001) அன்போடு நிறைவேற்றினேன். கேட்ட யாவரும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வகையில் உற்சாகமான வார்த்தைகளால் என்னை நிறைத்தார்கள்; நெஞ்சம் குளிர்ந்தது.

அவ்விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள் "சுவாமி ஞானப் பிரகாசர் அறிஞர்களுக்கெல்லாம் பேரறிஞராகவும், மேதைகளுக்கெல்லாம் மாமேதையாகவும் திகழ்கின்றார். எம் ஈழத்து வரலாற்று ஆசிரியர்களில் நேர்மையோடும், உண்மையோடும் வரலாறு படைத்தவர்களுள் சுவாமி ஞானப்பிரகாசரும் குறிப்பிடத்தக்க ஒருவர். ஆனால் இன்றைய இளம் தலைமுறையினருக்கு அவரைப் பற்றி அவ்வளவு தெரியாது" என்று குறிப்பிட்டார். "அருட்தந்தை அவர்களின் உரையைத் தொகுத்து வெளியிட்டால் இக்காலத்தில் பலரும் சுவாமி ஞானப்பிரகாசரைப் பற்றி அறிய உதவியாய் இருக்குமே" என்று அவ்விழாவிற்கு வருகை தந்திருந்த எமது அமல மரித் தியாகிகளின் மாகாண முதல்வரிடம் தம் கருத்தைத் தூவி விட்டார்.

அது போதாதா அவருக்கு? இதனை ஏன் தொகுத்து வழங்கக் கூடாது? என்ற ஆர்வத்தை முதல்வர் தூண்டிய வேளையில், அதனை ஓர் அருமையான வாய்ப்பாக ஆக்கிக் கொண்டேன். இதுதான் இச்சிறு முயற்சியின் ஆரம்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு, சரியாக, சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் குருத்துவ அர்ப்பணத்தின் நூற்றாண்டு நிறைவை நினைவுகூருகின்றோம். 1901.12.01 அன்று இறைபணியாளனாக அருட்பொழிவு பெற்றார். நாற்பத்தியாறு (46) ஆண்டுகள் அருட்பணியாளனாக வாழ்ந்து காலமாகி விடாமல் காலமாய் மாறிவிட்டார். இவ்வாண்டு சுவாமி அவர்களின் நூற்றியிருபத் தைந்து (125) ஆண்டின் பிறப்பு நிறைவை நினைவு கூருகின்றோம்.

ஆம், நம் மொழியிலே பல புதுமைகள் புரிந்தார்.
நம் திருமறையிலே பல புரட்சிகள் செய்தார்.
நம் இனத்திலே பல புதிர்களை ஆற்றினார்.

இப்படிப்பட்ட ஒரு வல்லவனை ". . . . இந்நாடு ஏன் மறந்தது? தமிழ் நாடு ஏன் மறைத்தது? இந்நாட்டுப் பாட நூல்களிலிருந்து அன்னாரின் வாழ்க்கை வரலாறு ஏன் எடுபட்டது?" என்ற செல்வரட்ணம் அடிகளாரின் நியாயமான கருத்துக்கள் என் நெஞ்சைத் தைத்தன. பல்கலைக்கழக பாடத்திட்டத்திலே பதியப்பட வேண்டியவர். . . . ஆராயப்பட வேண்டியவர்.

பாடநூலில்தான் அன்னாரின் வாழ்வும், பணியும், வரலாறும் மறைக்கப்பட்டாலும் மாணவர் மனங்களில் பொறிக்கப்பட வேண்டும் என்ற அவா இச்சிறிய முயற்சியை விரைவுபடுத்த இன்னும் ஒரு காரணியாய் அமைந்தது.

அச்சேற்ற அனுமதியளித்த முதல்வர், ஆசீர் வழங்கிய பெரியோர், கையெழுத்துப் பிரதி அமைக்க உதவிய செல்வி கிறிஸ்ரீனா பவானி, இந்நூலின் குறைகளை நிவர்த்திசெய்ய உழைத்தோர், அச்சேற்றிய அன்பர்கள் அனைவருக்கும் எனது உள்ளங் கனிந்த நன்றிகள்.

ஊக்கம் தந்து, உற்சாகமூட்டித்
துணைநின்ற
அத்தனை
அன்பு நெஞ்சங்களுக்கும்
என்
நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

*செ. அன்புராசா அ.ம.தி.*
"தொடர்பகம்,"
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**அ. சுவாமியின் வாழ்க்கைக் குறிப்புகள் சில.**

**ஆ. கருவாகி, உருவாகிக் குருவானது.**

1. மானிப்பாய் பெற்ற செல்வம்
2. அச்சுவேலி வளர்த்த மைந்தன்
3. மாதா, பிதா, குரு
4. கற்க கசடறக் கற்பவை
5. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
6. பணிவாழ்வில் காலடி

**இ. அற்புதமான ஆளுமையும், அதிசயிக்கும் ஆற்றல்களும்.**

1. அ.ம.தி.த் துறவி
2. ஏழையின் நண்பன்
3. திருமறைத் தூதன்
4. பன்மொழிப் பண்டிதர்
5. தர்க்கப் பிரசங்கத்தின் தந்தை
6. வரலாற்று வித்தகன்
7. கலைக் களஞ்சியம்
8. எழுதுகோலை ஏந்தியவர்
9. சகலகலா விற்பன்னர்

**ஈ. சுவாமியின் வாழ்க்கையில் மறக்கமுடியாத மனிதர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ

# சுவாமியின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில

- 30.08.1875 ஆம் ஆண்டு வைத்தியலிங்கம் (சுவாமி ஞானப் பிரகாசர்) மானிப்பாயில் பிறந்தது.
- 1876 ஆம் ஆண்டு கொள்ளை நோயினால் சுவாமியின் தந்தை சுவாமிநாதபிள்ளை இறந்தது.
- 1878 ஆம் ஆண்டு தாயும், மகனும் திருமுழுக்குப் பெற்றது.
- 12.09.1878 ஆம் ஆண்டு தாயார் மறுமணம் செய்தது.
- 1882 ஆம் ஆண்டுகளில் அச்சுவேலி திண்ணைப் பள்ளியில் படித்தது.
- 1886 ஆம் ஆண்டுகளில் மானிப்பாய் மெமோறியல் கல்லூாயில் கற்றது.
- 1888 ஆம் ஆண்டுகளில் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றது.
- 1893 ஆம் ஆண்டு இலங்கைப் புகையிரத எழுதுவினைஞர் பரீட்சைக்கு கொழும்பில் தோற்றியதும், குறிபொறிப்பாளராகப் பதவியேற்றதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☛ 1895 ஆம் ஆண்டு இலங்கை புகையிரத தலைமையகத்தில் பணிபுரிந்து உத்தியோகத்தை உதறித் தள்ளியது.

☛ 1895 ஆம் ஆண்டு புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்தது.

☛ 17.02.1898 ஆம் ஆண்டு அமலமரித் தியாகியாக அர்ப்பணம் செய்தது.

☛ 1899 ஆம் ஆண்டு அருட்சகோதரராக இருக்கும் காலத்தில் பங்குப் பணியில் பங்கேற்றது.

☛ 01.12.1900 ஆம் ஆண்டு திருத்தொண்டராக அர்ச்சிக்கப் பட்டது.

☛ 01.12.1901 ஆம் ஆண்டு அமலமரி அருட் குருவாக ஆயர் யூலன் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டது.

☛ 03.12.1901 ஆம் ஆண்டு முதற் திருப்பலியை நன்றிப் பலியாக அச்சுவேலியில் ஒப்புக்கொடுத்தது.

☛ 1901–1902 ஆம் ஆண்டு புனித மரியன்னை பேராலயத்தின தும், ஊர்காவற்றுறைப் பங்கினதும் உதவி அருட்பணியாள னாக பணிபுரிந்தது.

☛ 29.09.1905 ஆம் ஆண்டு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயப் பங்குக் குருவாகப் பணிபுரிய ஏற்றுக் கொண்டது.

☛ 1911 ஆம் ஆண்டு ஆஸ்பத்திரி வீதி புனித அருளப்பர் ஆலயத்திலிருந்து நல்லூர்ப் பகுதியில் நற்செய்திப் பணி புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☛ 1916 ஆம் ஆண்டு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம் சுவாமி அவர்களால் ஓலைக் குடிசையாக அமைக்கப்பெற்றது.
- ☛ 01.12.1926 ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழா நினைவு கூரப்பட்டது.
- ☛ 10.12.1926 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் பரிசளிப்பு விழா விற்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டது.
- ☛ 1930 ஆம் ஆண்டுகளில் யாழ் – வரலாற்றுச் சங்கத்தின் தலைவராகத் தெரியப்பட்டது.
- ☛ 1934 ஆம் ஆண்டு பாப்பிறை குருமட அதிபர் கலாநிதிப் பட்டத்துக்குரிய ஆய்வினை மேற்பார்வை செய்ய கண்டி அம்பிட்டியா குருமடத்திற்கு அழைத்தது.
- ☛ 04.04.1934 ஆம் ஆண்டு சிறிய தந்தை தம்பிமுத்துப்பிள்ளை இறந்தது.
- ☛ 1936 ஆம் ஆண்டு கடுமையான நோயுற்று அற்புதமாகச் சுகம் பெற்றது.
- ☛ 14.09.1936 ஆம் ஆண்டு பம்பாய் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் அருள்திரு. கெரஸ், சுவாமி ஞானப் பிரகாசர் அவர்களைச் சந்திக்க வருகை தந்தது.
- ☛ 1939 ஆம் ஆண்டு சுவாமி அவர்களின் தமிழ்ப் பெரும் பணியைப் புகழ்ந்து பாராட்டி ஜேர்மன் அரசால் முத்திரை வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1940 ஆம் ஆண்டு சரித்திரக் கையெழுத்துப்பிரதிக் குழுவின் ஓர் அங்கத்தவராக ஆளுநரால் கௌரவிக்கப்பட்டது.
- 1940 ஆம் ஆண்டுகளில் யாழ். ஆரிய திராவிட மொழி அபிவிருத்திச் சங்க துணைத் தலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு பல ஆண்டுகள் பணிபுரிந்தது.
- 1944 ஆம் ஆண்டு பல்கலைக்கழக உயர்மட்டக் குழு "செனட்" சபையின் உறுப்பினராகப் பணியாற்றியது.
- 1945 ஆம் ஆண்டு சுவாமி அவர்கள் மீண்டும் கடுமையாக நோய்வாய்ப்பட்டு சுகம் பெற்றது.
- 1946 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வீரமாமுனிவர் பெரு விழாவிற்கு தலைமைப் பேருரையாற்றியது.
- 1946 ஆம் ஆண்டு தாம் பிறந்த மண்ணில் உருவாக்கிய புனித அந்தோனியார் ஆலயத்தைக் கண்டு மகிழ்ந்தது.
- 22.01.47 ஆம் ஆண்டு தமதுயிரை இறை தந்தையிடம் கையளித்தது.
- 30.08.1975 ஆம் ஆண்டு பிறப்பின் நூற்றாண்டு விழா நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது.
- 22.05.81 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் சுவாமி ஞானப் பிரகாசரின் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.
- 22.01.97 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்த 50ஆம் ஆண்டு நினைவுகூரப்பட்டது.
- 01.12.2001 ஆம் ஆண்டு குருத்துவ நூற்றாண்டு நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ

# கருவாகி, உருவாகிக் குருவானது

## ① மானிப்பாய் பெற்ற செல்வம்

யாழ்ப்பாணத்தில் மாங்கனியும், தேன்பலாவும் தித்திக்கும் இடங்களில் மானிப்பாயும் ஒன்று. நெல் வயல்களும், தோட்டங்களும், தென்னந்தோப்புகளும் எப்போதும் மனதிற்கு இதத்தை ஏற்படுத்துகின்றது. இந்துக் கோயில்களும், கிறிஸ்தவ ஆலயங்களும், கல்விக் கூடங்களும் இவ்வூரை அணி செய்கின்றன.

சேர். பொ. இராமநாதன், சேர். அருணாசலம், புலவர் ஆனந்த குமாரசுவாமி போன்ற அறிஞர்களையும் கலாநிதி ஐசக் தம்பையா, முதலியார் காராளபிள்ளை, முதலியார் இராசநாயகம், முதலியார் கனகசபை போன்ற பெரியோர்களையும் பெற்றெடுத்தது இவ்வூரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மானிப்பாய் ஊர் சுவாமி ஞானப்பிரகாசரையும் ஈன்றெடுத்தது இம்மண்ணும் மக்களும் செய்த மாதவமே.

இராஜசிங்கம் சுவாமிநாதபிள்ளை அவர்கட்கும், சிற்றம்பலம் தங்க முத்து என்பவருக்கும் ஒரே மகனாய் 1875ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 30ஆம் நாள் சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்தார்.

சுவாமி அவர்களின் தந்தையும், தாயும் இந்து சமயத்தவர் என்பதனாலும் இப்பின்னணியைக் கொண்டதினாலும் மகனுக்கு வைத்தியலிங்கம் என்ற பெயரை வைத்தனர். அயலவர்கள் அவரை 'கனகரத்தினம்' என்றும் அன்போடு அழைத்தனர்.

சுவாமிநாதபிள்ளை ஆசிரியப்பணி புரிந்து வந்தார். படித்தவர், சிறந்த பண்பாளர், இறை பற்றுடையவர். அவர் காலத்தில் வேலக்கை பிள்ளையார் கோவிலின் பரிபாலகைராகவும் பணிபுரிந்தவர்.

தங்கமுத்து தாய்க்குரிய அத்தனை பண்புகளையும் கொண்டிருந் தாள். கல்விமான் சிற்றம்பலம் அவர்களுடைய அன்புக்குரிய மகளாவார். இறைபக்தி கொண்டவர். விவிலியத்தைப் படிக்கும் பழக்கமுடையவர்.

குழந்தை வைத்தியலிங்கம் பால்மணம் மாறாத பாலகன். ஒரு வயது ஆவதற்கு முன்பே காய்ச்சலினால் கடுமையாக நோயுற்றி ருந்தார். அந்நேரத்தில் எல்லாம் தாயானவள் விவிலியம் படிப்பதில் ஆறுதல் அடைந்தாள். வேதாகமத்தின் யோபு ஆகமம் தியானித்து முடிந்து, சங்கீத நூலைப் படித்து முடிப்பதற்கு முன்பே பாலகன் குணம் பெற்றான் என்று தமது இறை நம்பிக்கையை தன் அன்பு மகனோடு பிற்காலத்தில் பகிர்ந்து கொண்டார்.

இதனால் இறைவனின் இரக்கத்தில் இன்னும் அதிகமாக நம்பிக்கை கொண்டார். குழந்தையை இப்பேராபத்திலிருந்து காப்பாற் றிய எல்லாம் வல்ல இறைவனுக்கே ஒப்புக்கொடுப்பதாகவும் உறுதி கொண்டாள்.

இக்காலத்தில் கொடிய கொலரா நோய் இப்பிரதேசத்தில் பல மக்களைக் கொள்ளை கொண்டது. இக்கொள்ளை நோய்க்குப் பலியான வர்களில் சுவாமிநாதபிள்ளையும் ஒருவர். பாலகன் வைத்தியலிங்கம் ஆசையாக 'அப்பா' என்று அழைப்பதற்கு முன்பே அவர் அமரராகினார். இது நடந்தேறியது 1876ஆம் ஆண்டளவில். வைத்தியலிங்கத்திற்கு அப்போது வயது ஒன்று. தங்கமுத்து இளம் வயதில் கணவனை இழந்து பரிதவித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## ② அச்சுவேலி வளர்த்த மைந்தன்

குணத்திலே தங்கத்தை ஒத்தவளான தங்கமுத்துவிற்கு வாழ்வின் புதிய அத்தியாயம் ஒன்று காத்திருந்தது. கடவுள் காட்டிய கருணையால் அவள் பெற்ற பாக்கியம் அது. அச்சுவேலியைச் சேர்ந்த உடையார் சந்தியாப்பிள்ளை அவர்களின் மூத்த மகன் தம்பிமுத்துப் பிள்ளைக்கும், தங்கமுத்துவிற்கும் திருமணம் ஏற்பாடாயிற்று.

தம்பிமுத்துப்பிள்ளை பக்தியுள்ள ஒரு கத்தோலிக்கர் ஆதலின் தாயும், மகனும் தம்பிமுத்துப்பிள்ளையின் பின்னணியைத் தழுவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றனர். வைத்தியலிங்கத்தின் தந்தை சுவாமிநாதபிள்ளையின் உறவினரிடையே ஒரு சில எதிர்ப்புக்கள் மத்தியில் தங்கமுத்து அருள் சுரக்கும் அன்னமுத்தாகவும், வைத்தியலிங்கம் ஞானஒளி கொடுக்க ஞானப்பிரகாசராகவும் மாறினார்கள்.

அருட்தந்தை லிற்றன் அ.ம.தி. அடிகள், "எல்லாரும் வயலை வேண்டி வேளாண்மை செய்வார்கள். நானோ விளைச்சலோடு வயலை வாங்கிவிட்டேன்" என்று சொல்லி ஆனந்தம் பொங்க திருமுழுக்கு அளித்தார். இதன் பின்னர் 1878ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் ஒன்பதில் (9) தம்பிமுத்துப்பிள்ளைக்கும், அன்னமுத்துவுக்கும் திரு மணம் நிறைவேறிற்று.

தம்பிமுத்துப் பிள்ளையும், அன்னமுத்துவும் இனிமையான இல் லற வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். இல்லறத்திற்கு இலக்கண மாக, எடுத்துக்காட்டாக அக்குடும்பம் பெயரோடும் புகழோடும் அன்புற வில் வளர்ந்து வந்தது.

குடும்ப வாழ்வின் ஆரம்ப காலங்களில் இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாத குறையைப் பாலகன் ஞானப்பிரகாசர் நிறைவு செய்தார்.

திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையை இக்குடும்பமும் தனது வாழ்வாகக் கொண்டது. ஞானப்பிரகாசர் தமது மிகச்சிறிய குழந்தைப் பருவத்தில் தந்தையை இழந்து தவித்தபோதும், தம்பிமுத்துப் பிள்ளையை அன்புள்ள தந்தையாகப் பெற்றுக்கொண்டமை அவர் செய்த பாக்கியமே.

இவ்வன்புள்ள குடும்பத் தலைவனும் சிறிய தந்தையுமாகிய தம்பி முத்துப்பிள்ளைக்கும், பாசமுள்ள தாயாகிய அன்னமுத்துவுக்கும் கிடைத்த பெரும்பேறு பணிவுள்ள கடவுள் பக்தியுள்ள அன்புப் புதல்வன் ஞானப்பிரகாசரேயாகும்.

இயேசுவின் ஆளுமையிலும், ஆன்ம விருத்தியிலும் எப்படி யோசேப்பும், மரியாவும் அதிமுக்கிய பங்கை வகித்தார்களோ, அது போல தம்பிமுத்துப்பிள்ளையும், அன்னமுத்துவும் என்பும் தசையும் போல ஞானப்பிரகாசருடைய வாழ்வில் ஒன்றித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ③ மாதா பிதா குரு

மானிப்பாய் மண்ணில் பிறந்த ஞானப்பிரகாசர், தனது சிறிய தந்தை தம்பிமுத்துப்பிள்ளையின் இடமாகிய அச்சுவேலியில் வளர்ந்தார். அச்சுவேலி புனித சூசையப்பர் திண்ணைப் பள்ளியில் தமது கல்வியை ஆரம்பித்தார். இத்திண்ணைப்பள்ளி நிமிர்ந்து நிற்கத் தூணாய் இருந்தவர்களுள் தம்பிமுத்துப்பிள்ளையும் ஒருவர்.

தம்பிமுத்துப்பிள்ளை சிறந்த கல்விமானாகவும், நாடக ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், பத்திராசிரியராகவும் திகழ்ந்தார். எஸ்தாக்கியார் நாடகம், யோசேப்பு டிராமா, தூ'மரத நாடகம், சந்தியோகுமையோர் சகாயசபா என்பன இவரின் கைவண்ணத்தினாலான நாடகங்களாகும். பல அற்புதமான நாடகங்களையும், வைத்திய ஏடுகளையும், சமூக, சமய, இலக்கிய, இலக்கண நூல்களையும் வெளியிட்டார். 'சன்மார்க்க போதினி' என்ற பத்திரிகையை அனைத்து மக்களும், எல்லா சமய நம்பிக்கை கொண்டவர்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக நாற்பத்தேழு (47) ஆண்டுகள் வெளியிட்ட பெருமை ஞானப்பிரகாசரின் சிறிய தந்தையாராகிய தம்பிமுத்துப் பிள்ளையையே சாரும்.

தம்முடைய சிறிய தந்தையாரைப் பற்றி பல இடங்களில் குறிப்பிடுகின்ற சுவாமி ஞானப்பிரகாசர் ஓரிரு இடங்களில் ". . . சிறிய தந்தையார் எனக்குப் பயிற்றுவித்தவை வேறொரு நிரலில் உள்ளவை. ஆண் பிள்ளைக்குரிய தைரியம், எடுத்ததை விடாது முடிக்கும் துணிவு, நேர்மை, மரியாதை, ஈகை இவற்றை மக்களுக்குப் பயிற்றுவதில் அவருக்கு நிகரான தகப்பனைக் காண்பது அரிது என எண்ணுகிறேன். சொன்ன சொல்லை நிறைவேற்றச் செய்வார். பொய், களவின் நிழலும் காணமுடியாது . . .

இரண்டொருமுறை உள்ளபடி பொய் இல்லாவிட்டாலும் பொய் போலத் தோன்றிய சில வார்த்தைகளுக்காக நல்ல பூசை வாங்கின ஞாபகம் எனக்கு இப்போதும் இருக்கிறது. . . . " என்றும், "அவரிடத்தில் படித்த ஈகைப் பழக்கம் இன்றைக்கும் என்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் வைத்திருக்க விடாமல் செய்து வருகிறது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதை நன்றாக உணர்ந்து கொள்கிறேன்". இவ்வாறு சிறியதந்தையினுடைய ஆளுமையின் சிறப்புகளைக் கோடிட் டுக் காட்டுகின்றார். சிறிய தந்தையாரை 'அப்பு' என்று அழைக்கும் ஞானப்பிரகாசர், தந்தையாரின் ஸ்தானத்தைக் கடந்து தம்முடைய குரு நாதர் என்றே அவரைப் போற்றி நடந்தார்.

"இவ்வாறு தம்பிமுத்துப்பிள்ளை, நூலாக்குதல், நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தல், அச்சுக் கோத்தல், புத்தகம் வெளியிடுதல், பாடல்கள் இயற்றல், பத்திரிகை நடத்துதல் என்னும் இவற்றோடு பதிவுகாரியஸ்தர், பகுதிப் பராபத்தியக்காரன் என்னும் இரு அலுவல் களை மக்கள் மதிக்கவும், அரசினர் வியக்கவும் தக்கவாறு செய்து வந்தார். கோவில் மூப்பராகவும், மக்கள் பணியே மகேசன் பணியென்று மதிப்பவராகவும் வாழ்ந்தார்" என்று 'நெஞ்சே நினை' என்ற நூலிலே தம்பிமுத்துப்பிள்ளையின் உயர்ந்த வாழ்வையும், உன்னதமான பணி யையும் பசுமரத்தாணிபோல எம் நெஞ்சில் பதியவைக்கின்றார் நூலின் ஆசிரியர் "அமுது" வித்துவான் அடைக்கலமுத்து அவர்கள்.

எப்படி அன்புத் தந்தையையும் அருமையான சிறிய தந்தை யையும் சுவாமி ஞானப்பிரகாசர் பெற்றாரோ அதுபோல இல்லறத்திற்கு இலக்கணம் வகுக்கப் பிறந்தவளாக தமது அன்புத் தாயைப் பெற்றார். தம்முடைய அருமைத் தாயைப் பற்றி தனயன் சுவாமி ஞானப்பிரகாசரே இப்படிச் சொல்கிறார்.

"தாயிடம் நான் பெற்றுக்கொண்ட சிறந்த போதனை வேதாகமங் களைப் பூச்சியமாய் வாசித்தலும், செகமீட்பராகிய எங்கள் ஆண்டவரில் மெய்யன்பு கொள்ளுதலுமே என்று சொல்லலாம். அவருக்குப் பழைய புதிய ஏற்பாடுகளின் சரித்திரங்கள் பழம்பாடமாகத் தெரியும் . . ."

"பிள்ளைப் பாட்டுக்கள், மிருகங்களின் கதைகளோடு பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்களையும் இயேசுநாத சுவாமியின் சரித்திரத்தையும் எனக்குச் சொல்லிக் கொடுப்பார். ஆண்டவர் பெயரில் அன்பு மூட்டு கின்ற சிறு பாடல்களைச் சொல்லித் தருவார். இவைகளால்தான் சரித்திரப் பிரீதியும், வேதாகம வாசிப்பில் விருப்பமும், சங்கீதத்தில் சார்பும் எனக்குண்டாயின என்று எண்ணுகின்றேன். என் தாயைப்போல ஆண்மக்களை வயது சென்ற பின்னரும் அருகில் வைத்து' அளவளா விப் பேசுகிற தாய்மாரை நான் அதிகமாய்க் கண்டதில்லை".

அன்போடு சேர்த்து அறிவையும், பாலோடு சேர்த்துப் பண்பையும் கொடுக்கின்ற தாய்மாருக்கு அன்னமுத்து ஓர் அருமையான எடுத்துக் காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ④ கற்க கசடறக் கற்பவை

அச்சுவேலி திண்ணைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய ஞானப்பிரகாசர் தமது பதினொராவது வயதில் மானிப்பாய் 'மெமோறியல்' கல்லூரியில் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காக அனுப்பப்பட்டார்.

இக்காலத்தில், அச்சுவேலிப் பங்குக்குருவாக இருந்த வண. இலத்தறன் சுவாமி அவர்கள், சிறுவன் ஞானப்பிரகாசர் கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்று சிறிய தந்தையாருக்குத் திடமாகக் கூறினார். அப்படியே புனித பத்திரிசியார் கல்லூாயில் சிறுவன் சேர்க்கப்பட்டான். சிறந்த மாணவனாகத் திகழ்ந்து பல பரிசில் களையும் பெற்றான். வார விடுமுறை நாட்கள் என்றால் "மானிப்பாய் தம்பி" ஞானப்பிரகாசர் தனது அன்னை அன்னமுத்துவையும், சிறிய தந்தையையும் பார்க்காமல் இருக்கமாட்டார்.

பாடசாலை தவிர்ந்த ஓய்வு நேரங்களை சங்கீதம் பாடவும், மத்தளம் அடிக்கவும், நாடகம் நடிக்கவும் ஞானப்பிரகாசர் பயன்படுத்திக் கொண்டார். சுறுசுறுப்பும், இளமைத் துடிப்பும், அறிவும், ஆற்றலும், பக்தியும், பக்குவமும் கொண்ட ஒரு வாலிபனாக அவர் உருவாகினார். தனது இளமைப் பருவ நாள்களில் சில சுவையான அம்சங்களை நகைச்சுவை கலந்து வர்ணிக்கின்றார். "எடுத்தவுடன் பாட்டு இயற்று கின்ற பழக்கம் தீங்குள்ளது என்பதை ஒருநாள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரும் நன்றாய்க் கையிலும் மனதிலும் பதிய எனக்கு படிப்பித்தார். தற்காலம் வட்டுக்கோட்டைக் கல்லூரியில் உபதலை வராய் இருக்கிறவர் மானிப்பாயில் என்னோடு கூட ஒரு வகுப்பில் படித்தவர். இவரும் நானும் சிலநாள், சிநேகிதராய் இருந்தோம். பின் 'கடுஞ்சிநேகம் பகை காட்ட' அவர் என்னைப் பேசிப்போட்டார். நான் வகுப்பிலிருந்துகொண்டுதானே அவரது செயலைக் கண்டித்து ஒரு பாட்டெழுதி நீட்டினேன். அவர் கோபித்துக் கொண்டு மாரிமுத்து உபாத்தியாயரிடம் அதைக் கொடுக்க அவர், 'வகுப்பு நேரம் செய்யும் வேலை இதுதானா?' எனச் சினந்து கையை நீட்டச் சொல்லி பிரம்பி னால் ஒரு அடி தந்தார். அவ்வடி எனது விசித்திர வேலைப்பாடுள்ள மோதிரம் தெறித்துப்போகச் செய்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑤ கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

புனித பத்திரிசியார் கல்லூரியில் படிப்பை முடித்துக்கொண்டு தமது மாமனாரின் அழைப்பை ஏற்று பதினெட்டாவது (18) வயதில் நுவரெலியாவிலுள்ள நானுஓயாவில் பெருந்தோட்டக் கணக்காளராக கடமை ஏற்கப் புறப்பட்டார்.

ஓய்வு நேரங்களில் தனியாகச் சென்று செபம் செய்வார். இவ் வேளையில் இலங்கைப் புகையிரதப் பகுதிநேர எழுதுவினைஞர் பதவிக் கான பரீட்சைக்கும் தோற்றி முதல்தரத்தில் சித்தியும் பெற்றார். இது 1893 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. ஒரு மாதப் பயிற்சியின் பின்பு கண்டி யிலுள்ள கடகமுவ என்ற புகையிரத நிலையத்தில் குறிபொறிப்பாளரா கச் சேர்ந்து தன் கடமையைக் கண்ணுங் கருத்துமாகச் செய்து வந்தார்.

இவரது ஆற்றலைக் கண்ட மேலதிகாரிகள் ஒரு வருட சேவை யுடன் 1894ஆம் ஆண்டு இலங்கை புகையிரத தலைமைச் செயலகத் தில் பணிபுரிய அழைத்தனர். கடமையில் கவனமும், கண்ணியமான செயல்களும், கட்டுப்பாடான நடத்தையும் இளைஞன் ஞானப்பிரகாசரை சிறந்த ஆளுமையுடையவராக மாற்றின. இளைஞன் ஞானப்பிரகாசர் இறைபற்றும், பணியார்வமும், சேவை மனமும் கொண்டிருந்தாலும் தான் குருவாக வரவேண்டுமென்று இறுதிவரை எண்ணவில்லை.

எனினும் இறைவனுக்குப் பணிபுரிய வேண்டும், இறைமக்களுக் குத் தொண்டு செய்யவேண்டும், திருச்சபைக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற புனிதமான எண்ணங்கள் ஞானப்பிரகாசரின் உள்ளத்தில் இருந் தன. இதனை உணர்ந்துகொண்ட அந்தோனிச் சுவாமியார், யாழ். மாட்டினார் குருமட அதிபர் யூல்ஸ் கொலின் அடிகளாருக்கு தமது எண்ணத்தை வெளிப்படுத்தினார். யூல்ஸ் கொலின் அடிகள் கடிதம் மூலம் தொடர்பு கொண்டும், நேரடியாகப் பேசியும் பலன் கிட்டவில்லை. இருப்பினும் அடிகள் கொழும்பு பொறளையிலிருந்த தமது சகோதரன் சாள்ஸ் கொலின் அடிகளாரைச் சந்திக்கும் வண்ணம் ஞானப்பிரகாச ரைக் கேட்டுக் கொண்டார். அவருடைய ஒரேயொரு வார்த்தை மட்டும் ஞானப்பிரகாசரின் பாதையிலே புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

"If you like to serve God why don't you leave the world and join the seminary". ("நீர் கடவுளுக்குப் பணிபுரிய விரும்பினால் ஏன் உலகத்தைத் துறந்து குருமடத்தில் சேரக்கூடாது".)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KUPA JPL
131270

# ⑥ பணிவாழ்வில் காலடி

வாழ்நாள் முழுவதும் சிறிய தந்தையைக் கவனித்து அவருக்குக் கடமை புரிவதே தமது கடன் என்றிருந்த ஞானப்பிரகாசர் குருமடம் செல்லத் தீர்மானிக்கின்றார். மனதில் சலனம், உள்ளத்திலே சங்கடம்.

இலங்கைப் புகையிரதத் தலைமையகத்தில் எழுதுவினைஞர் பதவியிலிருந்து விடைபெற்றுக்கொண்டு அன்றைய நாள் விடிவதற்குள் வீடு வந்து சேர்ந்தார்.

மகனின் முடிவை அறிந்த தாய் தயங்கினார். இருப்பினும் மகனின் விருப்பத்திற்குத் தடையாக இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய தந்தைக்கு இது மிகப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இம்முடிவை ஏற்க மறுத்தார். பெறாமகனின் தீர்மானத்தை மாற்றப் படாதபாடுபட்டார். எனினும் பயனில்லை. இறுதியாக தம்பிமுத்துப் பிள்ளை வேறொரு வழியும் இல்லாத நிலையில் தன்னைத் தானே தேற்றி, மனதை மாற்றிக் கொண்டார். இவையெல்லாம் 1895ஆம் ஆண்டில் நடந்தேறின.

இவ்வனுபவத்தை ஞானப்பிரகாசரே இவ்வாறு சொல்கிறார். "சிறிய தந்தையார் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு அவருக்கு உதவி செய்துகொண்டிருப்பதே என் கடமை என உணர்ந்தேன். கொலின் சுவாமியார் என்னைச் சந்தித்தபின் மனம் சற்று மாறிவிட்டது. அப்போதும் சிறிய தந்தையாருடைய நன்றியை எப்படி மறப்பேன் என்ற தடுமாற்றமே என்னை வருத்திக் கொண்டிருந்தது. அவரும் முன்னிலும் அதிகமாய் என்னில் பற்றுதல் காட்டி வந்தார். தமது அச்சியந்திர சாலைக்கு என் பெயரைச் சூட்டி, நானே தமக்குப் பின் அதை நடத்து வேன் என நம்பியிருந்தார். ஆறு மாத காலம் இந்த மனப்போராட்டம் நிலைநின்றது. ஈற்றில் கொலின் சுவாமி கூறிய ஒரே ஒரு வார்த்தை யால் மனம் தெளிந்து உத்தியோகத்தை உதறிவிட்டு யாழ்ப்பாணக் குருமடத்துக்குப் புறப்பட்டேன்".


பென்னம்பெரிய விருட்சம் ஒரு சின்னஞ்சிறிய விதையிலே அமைதியாக உறங்கியிருப்பதுபோல எழுத்தாற்றல், பேச்சு வன்மை, பணியார்வம், சேவைமனம் இவ்விளையவனிடையே அரும்ப ஆரம் பித்தன. அன்னாரின் பிற்காலப் பணிக்கு அவரின் ஆற்றல்கள் அப்போதே கட்டியங் கூறின.

ஆயரின் அனுமதியோடு குருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்துகொண்டே "அமலோற்பவ இராக்கினி தூதன்" என்னும் மாத இதழை கத்தோலிக்க வாசனையோடு மணம் பரப்பச் செய்தார். தர்க்கப் பிரசங்கத்தை பல பணித்தளங்களில் செய்து பணி வாழ்வைத் தம் குருத்துவப் பயிற்சிக் காலத்திலே ஆரம்பித்தார்.


ஆறு ஆண்டுகள் குருத்துவ வாழ்க்கை நெறியினில் தோய்ந்து, தேர்ந்து, தெளிந்து ஆயர் யூலன் அ.ம.தி. ஆண்டகை அவர்களால் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு 1901ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் தமது இருபத்தாறாவது (26) வயதில் அமல மரித் தியாகிகளின் குடும்பத்தில் மனித-புனித குருத்துவப் பணிக்குத் தேர்ந்துகொள்ளப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிமிர்ந்துயர்ந்த மேருமலை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இ

# அற்புதமான ஆளுமையும் அதிசயிக்கும் ஆற்றல்களும்

உயர்ந்த உருவம், மலர்ந்த முகம், கனிவுறும் கண்கள், விரிந்த நெற்றி, விறுவிறுத்த பார்வை, நீண்ட தாடி, நிமிர்ந்த நடை, கைகொடுக்கும் கரங்கள், களைப்படையாக் கால்கள், உறுதியான உள்ளம், எதையும் தாங்கும் இதயம் இவை எல்லாம் சுவாமி அவர்களின் நிழல் படத்தைப் பார்க்கின்ற போது எம் மனதில் நுழைகின்ற பதிவுகள்.

வெள்ளை நிற அங்கி அணிந்து, இடைப்பட்டி கட்டி, சிலுவையைச் சிந்தையில் நிறுத்தி, உள்ளத்தில் இருத்தி, அதனை நெஞ்சினில் தாங்கி அமைதியாகவும், அடக்கமாகவும் காணப்படுவார். அமலமரித் தியாகிகளுக்கே உரித்தான அருளின் களஞ்சியம் அது.

ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு, அவர் தெரிந்துகொண்ட வாழ்க்கை நெறிகள். எளிமை அவர் தேர்ந்துகொண்ட வாழ்க்கைமுறை. இனிமை அவரோடு கூடப்பிறந்தது. சேவை அவரோடு சேர்ந்திருந்தது. பணி வாழ்வு அவர் உள்ளத்தில் பரவிக் கிடந்தது. ஈகை அவரோடு இணைந்து கொண்டது. அன்பு அவரை ஆட்கொண்டது. அறிவு அவருக்குச் சேவகம் செய்தது. கல்வி அவரிடத்தில் கற்றுக்கொண்டது.

அவர் படிக்காத புத்தகம் இல்லை. பேசாத மேடை இருக்கமுடியாது. செய்யாத ஆராய்ச்சியைக் கூறமுடியாது. சொல்லாத போதனையோ, செய்யாத பிரசங்கமோ இல்லையெனலாம். போகாத ஆலயங்களையோ, சந்திக்காத மக்கள் கூட்டத்தையோ அறிய முடியாது.

சிந்தனைத் தெளிவும், செயல் திறனும், உள்ளத்தில் ஒளியும், ஞான உறுதியும் சுவாமி அவர்களின் வார்த்தையிலும், வாழ்விலும் மிளிர்ந்தன.

அவரது ஆளுமையின் திறன்களையும், அவர் ஆற்றல்களையும் அகழ்ந்துகொண்டு போகும்போதுதான் அது எவ்வளவு அற்புதமானது என்று எம்மை அதிசயிக்க வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ① அ.ம.தி.த் துறவி

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஓர் அமலமரித் தியாகி. அமல மரித் தியாகிகள் என்ற உலகளாவிய குழுமத்தைச் சேர்ந்தவர். "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க ஆண்டவர் என்னை அனுப்பினார்" (லூக்.4:18) என்பது அமலமரித் தியாகிகளின் உள்ளுயிராய் இருக்கிறது.

ஏழைகளுக்காகத் தங்களை அர்ப்பணிப்பது என்பது அ.ம.தி. களின் இயக்குநர் தந்தை புனித இயூஜின் டீ மசனெற் அவர்களின் இதயத் துடிப்பாகவும், இறையரசின் இலட்சியமாகவும் இருந்தன. இயூஜின் டி மசனெற் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். பிரான்சியப் புரட்சி (1789) அந்நாட்டில் யாரையுமே விட்டுவைக்கவில்லை. இயூஜினும் அதற்கு விதிவிலக்கல்ல.

இவ் அனர்த்தம் முழுத் தேசத்தையும், ஏன் மக்களையுமே இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிட்டது. இயூஜின் டீ மசனெற் 1782ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் முதலாம் நாள் பிறந்தவர். எட்டு (8) வயதில் அகதி வாழ்வின் அவலம் அவருக்கு ஆரம்பிக்கின்றது. ஏறக் குறைய பன்னிரெண்டு (12) அல்லது பதின்மூன்று (13) ஆண்டுகள் பலதரப்பட்ட நெருக்கடியான, நிம்மதியிழந்த சூழலிலே தமது வாழ்வை நடத்துகின்றார். இக்காலப் பகுதியில் ஆண்டவரின் அருட்கரம் அவரோடு இருந்தது என்பதில் ஐயமில்லை.

மனிதம் மடிந்து, புனிதம் புதைந்து, மனிதாபிமானம் மறைக்கப் பட்டு, மனித நேயம் மறுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தைக் காண்கின்றார். பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப் பட்டு, மனித மாண்பையும், மகத்துவத்தையும் இழந்த அடிமைகளாக நடத்தப்பட்ட, சாதாரண - ஏழை - பாமர மக்களைத் தன் 'உடன்பிறப் புக்களாக' ஏற்றுக் கொண்டார்.

அப்போதே ஏழைகளுக்கான பணி ஆரம்பமானது. முதலில் தன்னை ஒரு பணிக்குருவாக அர்ப்பணிக்கிறார். தன்னைப் போன்ற நான்கு (4) அல்லது ஐந்து (5) அருட்பணியாளர்களுடன் அன்று தொடங்கிய குழுமம் இன்று ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி சுமார் அறுபத்தெட்டு (68) நாடுகளில் பரந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் பொஞ்ஜின், ஆயர் யூலன், அருட்தந்தை ஸ்மித், அருட் தந்தை சாள்ஸ் மத்தியூஸ், அருட்தந்தை டண், அருட் தந்தை லோங், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற எத்தனையோ தியாகிகள் இக் குழுமத்தின் வரலாற்றிலும், எம் நாட்டின் சரித்திரத்திலும் மங்காத தடம் பதித்தவர்கள்.

இவர்களின் வழித் தோன்றல்கள் எப்போதுமே வாழையடி வாழையாக வந்துகொண்டும், வாழ்ந்து கொண்டும், வளர்ந்து கொண்டும் இருப்பார்கள். காரணம் 'ஏழைகள் எப்போதும் உங்களோடு இருப் பார்கள்' (மத். 26:11). ஆகவே ஏழைகள் இருக்கும்வரை ஏழைகளுக் காக வாழ்பவர்கள் வாழ்ந்துகொண்டும், இயங்கிக்கொண்டும், இருந்து கொண்டும் இருப்பார்கள்.

ஈழநாட்டுடனான அமலமரித் தியாகிகளின் தொடர்பும் (1847), தொண்டும் 153 ஆண்டுகளைக் கடந்து விட்டது. இந்த நீண்ட காலப் பகுதியில் கல்விக் கூடங்களையும், கல்லூரிகளையும், ஆலயங்களை யும், நூலகங்களையும், ஸ்தாபனங்களையும், அச்சகங்களையும், தொழிலகங்களையும், பயிற்சி நிலையங்களையும், குரு மடங்களையும் உருவாக்கி, நிர்வகித்து வந்திருக்கின்றன.

எண்ணிலடங்காத பேரறிஞர்களும், பேராசிரியர்களும், கல்விமான் களும், புத்திஜீவிகளும், தொண்டர்களும், இறைபணியாளர்களும் எம் மத்தியில் தோன்றக் கருவாய் இருந்திருக்கின்றார்கள்.

இன்றும், ஏழைகளுக்கான நற்செய்திப் பணி தொடர்கிறது. நல் வாழ்வுக்கான தியானங்கள், உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கான உளநலப் பணிகள், நோயாளர் சிறைப்பட்டோருக்கான ஆன்மீக ஆற்றுப் படுத்தற் பணிகள், சமூகசேவைப் பணிகள், கல்விப் பணிகள், உரு வாக்கப் பணிகள், ஆன்மீக வழிகாட்டல் பணிகள், சிறுவர் பராமரிப்புப் பணிகள், பங்குப் பணிகள் போன்ற இறையரசுத் தொண்டுகள் தொடர்ந் தாற்றப்படுகின்றன.

எனினும் **காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து, அறிந்து எழுகின்ற தேவைகளைக் கருத்திற் கொண்டு இந்நேரத்தின் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணிப்பது காலத்தின் கணிப்பாம். இதுவே அ.ம.தி.களின் இறை அழைப்பும், இறையரசிற்கான அர்ப்பணமுமாகும்.**

இது பல முகங்களோடு வாழுகின்ற ஏழைகளுக்கான பணியை வேகப்படுத்தவும், விரிவுபடுத்தவும் துணைபுரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ② ஏழையின் நண்பன்

ஞானப்பிரகாசர் சுவாமிகள் சிறு வயதில் இருந்தே ஏழைகளோடும், இல்லாதவர்களோடும், 'தாழ்த்தப்பட்டவர்களோடும்' மரியாதையுடனும், மதிப்புடனும் பேசவும், பழகவும், நேசிக்கவும் கற்றுக் கொண்டார். சிறுவயதில் நடந்த ஒரு சம்பவத்தினை அச்சுவேலியைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுயிருக்கின்றார். "நீர் தாழ்த்தப்பட்டவர்களை எடே, எடி, வா, போ என்று கூப்பிடாமல் சகோதர நேசத்துடன் தம்பி, தங்கைச்சி இங்கே வாரும் என்று அழைத்தால் ஆண்டவருக்கு அதிக பிரியமாயிருக்கும் என்று போதனை புகட்டி விட்டார். அந்த நாள் தொடக்கம் இற்றைக்கும் அப்படியே பேச்சிலும், கிரியைகளிலும் நடத்து வருகிறேன்".

**ஏழைகளுக்கு எதையாவது கொடுத்துத் திருப்தியடைகின்ற உலகிலே ஏழைகளுக்காக, எளியோருக்காக வாழப் பிறந்தவர் ஒரு சிலரே. அதிலும் ஏழைகளுக்காக ஏழையாக வாழ்பவர் இன்னும் மிகச் சிலரே. அதில் சுவாமி ஞானப்பிரகாசர் தனித்துவமானவர்.** ஏழைகள், எளியவர்கள், சமுதாயத்தினால் தாழ்த்தப்பட்டவர்கள் குரலாக நின்று வாழ்நாள் முழுவதும் உழைத்த ஈழநாட்டின் முதல் மனிதன்தான் நமது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

உயர் சாதியினர், கீழ் சாதியினர் என்ற சமூகப் பாகுபாடு தலைதூக்கி இருந்த நேரம். இத்தீராத பரம்பரை நோய் தாம் வாழும் பரந்து விரிந்த தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்லாது, தான் நேசித்து அன்பு செய்த திருச்சபையாகிய இறை குழுமத்தையும் பற்றிப்பிடித்ததை எண்ணி வருந்தினார். மனம் வெதும்பினார்.

இச்சவாலைத் துணிவுடன் எதிர் கொண்டார். **வெறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் வரிசையில் நின்று தமது வாழ்வை அர்ப்பணித்தார். நோயாளிக்கு வைத்தியமும், நோய்க்கு மருத்துவமும் செய்தார்.** அவருடைய '25 வருட கத்தோலிக்க வளர்ச்சி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[XXV Years of Catholic Progress] என்ற நூலில் தமிழரின் மாறாத இச்சமூக நோயினை வேதனையுடன் குறிப்பிடுகிறார். "In Jaffna you may work other miracles but not the one of dissipating the unchristian atmosphere of 'caste' which may be said to permeate the very being of the Tamil man – such is the tyranny of prejudice nurtured through centuries and millenniums!" ("கிறிஸ்தவமல்லாத மறைக்க முடியாத சாதி என்ற சூழமைவைத் தவிர, யாழ்ப்பாணத்தில் வேறு ஏதாவது புதுமைகள் செய்யலாம். இது, பல நூற்றாண்டு, ஆயிரமாண்டு கால மாகத் தமிழனின் சுயத்தில் வளர்க்கப்பட்ட கொடூரமான முற்சாய்வு எண்ணமாகும்.")

தமது ஐம்பது (50) வருட அனுபவத்தைக் கூறும் சுவாமியாரின் வார்த்தைகள் பல வருடங்கள் கழிந்தும் இன்றும் அவை எதிரொலித் துக் கொண்டிருக்கின்றன. எம் உள்ளங்களை ஊடுருவுகின்றன. "சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி, உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று பாடும் மகாகவி பாரதியாரின் வரிகளும், "ஓடும் குருதி யிலும் வழிந்தோடும் கண்ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ?" என்று பாடும் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் வார்த்தைகளும், "தாழ்த்தப்பட்டவர்களின் அப்போஸ்தலரின்" **சாதிக் கலப்பற்ற, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தை உருவாக்க வலுச் சேர்க்கட்டும்.** "வலியோரை வாழ்த்தி, எளியோரைத் தாழ்த் தும் உலகே உன் செயல்தான் மாறாதா?" என்று பாடும் கவிஞனின் ஏக்கம் தீருமா?

'இனி உங்களிடையே யூதன் என்றும், கிரேக்கன் என்றும், அடிமை என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. இயேசுக் கிறிஸ்துவுக்குள் இணைந்துள்ள யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்' என்ற அருள் வாக்கு எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்குமா?

'நற்செய்திப் பணி ஒரு புன்முறுவலிலேயே ஆரம்பிக்கிறது'. இது அன்னை திரேசாவின் அன்பு சொரியும் வார்த்தைகள்.

சுவாமி ஞானப்பிரகாசர் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர். கல்வி கற்க அடிப்படை வசதி வாய்ப்புக்கள் இல்லாத பிள்ளைகளுக்கு கல்விக் கூடங்களை அமைத்துக் கொடுத்தார். தானே ஆசிரியராக இருந்து பல இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறையை மட்டுமல்ல, ஆசிரியர் இல்லாக் குறையையும் நிவர்த்தி செய்தார். மர நிழல்களும், ஓலைக் குடிசைகளும், கொட்டில்களும் ஏழைப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கல்விச் சாலைகளாக அன்று அமைந்தன. இவ்வாறு பன்னிரண்டு பாடசாலைகள் அவருடைய கவனிப்பில் ஆறுதலடைந்தன.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போயிட்டிக்கு அருகில் ஒரு தொகுதி நிலத்தை வாங்கி மக்களைக் குடியமர்த்தினார். அப்போது யாழ். ஆயராய் இருந்த யூலன் ஆண்டகை அவர்களின் பெயரையே அவ்வூருக்கு இட்டு "யூலனூர்" [Julanur] என்றழைத்தார்.

வட பகுதியில் ஏழை மக்களின் நல்வாழ்விற்கு முதன்முதல் குடியேற்றத்தை உருவாக்கியவர் சுவாமி அவர்களே. **ஏழைகள் ஏற்றம் பெற உகந்ததெனக் கருதும் எச்சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விட்டதில்லை.**

இவருடைய பணிகளுக்கெல்லாம் உதவிக்கரம் கொடுத்தவை மாட்டு வண்டியும், மிதி வண்டியுமே. மாட்டு வண்டியில் அவருக்கென்றிருந்த ஒரேயொரு சொத்தான அறிவுச் செல்வத்தை பெருக்கும் புத்தகங்களை எடுத்துச் செல்வார். 'சைக்கிளில்' பயணித்தால் ஆறுதலாக விரும்பிய இடத்தில் நின்று, மக்களைக் கண்டு, உரையாடி அவர்களின் உள்ளத்தில் இறையன்பைத் தூவலாம் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

அதனால்தான் அவருடைய பணிக் களத்தின் போக்குவரத்தை இலகுவாக்க ஜேர்மனியில் ஒரு கத்தோலிக்க ஸ்தாபனம் நன்கொடையாகக் கொடுத்த மோட்டார் வண்டியைக்கூட வாங்க மறுத்துவிட்டார். ஏழைகளோடு ஏழையாக வாழ சுவாமி அவர்கள் தேர்ந்து கொண்ட யுக்தியோ இது. . .

சுவாமி அவர்களின் எளிமையையும், ஏழைகள் பால் கொண்ட அன்பையும் இறையரசின் பணிவாழ்வில் இன்றும் பணியாற்றும் மதுர நாயகம் அடிகள் தம் வாழ்க்கைப் புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "ஞாயிறு பூசை முடிந்தவுடன் ஏழைகள் அவருடைய வருகைக்காகக் காத்து நிற்பார்கள். அவர்கள் எதைக் கேட்டாலும் கொடுக்கப் பின்னிடார். பெட்டியிலுள்ளது, சட்டைப் பையிலுள்ளது, உண்டியற் பெட்டியிலிருப்பது ஆகிய எல்லாப் பணமும் ஏழைகள் கைக்கு மாறிவிடும். சிலவேளைகளில் உபதேசிமாரை அனுப்பி, அடுத்த கோவில்களில் உள்ள உண்டியற் பெட்டிகளிலிருக்கும் காசைக்கூட எடுப்பித்துக் கொடுப்பார். இப்படியாக வறியவர்களின் வாழ்க்கையை உயர்த்தி, தம்மை வறுமை நிலைக்கு ஆக்கிக் கொண்டார். நெடுங்காலப் பழக்கத்திலிருந்த சுருட்டுக் குடியைக் கூட பணக் கஷ்டத்தினால் முற்றாக நிறுத்திவிட்டார்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை எளியவர்களோடு இணைந்திருக்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KUMA JPL

131270

# ③ திருமறைத் தூதன்

புதிய ஏற்பாட்டின் திருச்சபையில் எவ்வாறு பவுல் அப்போஸ்தலர் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டாரோ, பாரதத்தில் எப்படி புனித பிரான்சிஸ்கு சவேரியார் பணிபுரிந்தாரோ, அவ்வாறே ஈழ நாட்டில், 'ஈழத்தின் அப்போஸ்தலர்' என்று அழைக்கப்படும் முத்திப் பேறுபெற்ற யோசவ்வாஸ் முனிவரையும், 'கத்தோலிக்க கலை இலக்கியத்தின் தந்தை' எனச் சொல்லப்படும் யாக்கோமே கொன்சால்வேஸ் - சாங்கோ பாங்க - சுவாமியையும், மறைபரப்பாளர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச ரையும், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளையும் வரலாறு என்றுமே மறக்க முடியாது.

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் தாய் மொழியாம் நம் தமிழ் மொழியை எந்த அளவிற்கு நேசித்தாரோ, அந்த அளவிற்கு திருச்சபை யையும் அன்பு செய்தார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது சுவாமி அவர்களின் ஆளுமையின் வெளிப்பாடாகும்.

1901ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் அருட் பணியாளனாகத் திருநிலைப்படுத்தப்பட்டு ஊர்காவற்றுறைப் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாக சுமார் ஒரு வருட காலம் பணி செய்து விட்டு, யாழ். மரியன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத் தந்தை யாகப் பொறுப்பேற்றார்.

அதன் பின்னர் 1904ஆம் ஆண்டு நல்லூர் புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தைக் கட்டுவதற்கு முன்பு அங்கு மறைபரப்புப் பணி மனை நிலையத்தை நிறுவி, நற்செய்திப் பணியையும் தொடர்ந்தார்.

நல்லூர் தொடங்கி முள்ளியவளை வரை சுமார் முப்பத்தேழு (37) கிராமங்களுக்கு மேய்ப்பனாக இருந்து ஒருசில இளம் குருக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் நாற்பத்து மூன்று (43) ஆண்டுகள் நல்லூர் மறைபரப்புப் பணிமனை நிலையத்தை மையமாக வைத்து மறைபரப்புப் பணியை மேற்கொண்டார். சுமார் பத்தொன்பது (19) ஆலயங்களை அமைத்து பணியை விரிவாக்கினார். ஏறக்குறைய மூவாயிரம் (3000) புதுக் கிறிஸ்தவர்களின் ஞானத் தந்தையானார்.

சுவாமி அவர்களின் ஆன்ம வாஞ்சைக்கு இங்கே ஓர் எடுத்துக் காட்டு. சுவாமியின் போதனையால் உரும்பிராயில் நூற்றியேழு (107) பேர் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட போது எதிர்ப்புக்கள் எழுந்தன. ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்தன.

இவ் ஆபத்தான நிலையைத் தடுப்பதற்கு, அப்போது ஆயராக இருந்த யூலன் அ.ம.தி. ஆண்டகை, சுவாமி அவர்களை அவ்விடத் திலிருந்து அகன்று கொஞ்சக் காலம் வேறிடத்தில் பணிபுரியக் கேட்டுக் கொண்டார். "புது ஆடுகளை ஆபத்தான நிலையில் விட்டு மேய்ப்பன் விலகுவது கோழைத்தனம். எனது உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் அவ்வூரை விட்டு விலக எண்ணவில்லை. நீங்கள் ஆணை யிட்டால் அதற்குப் பணிய நான் தயாராக இருக்கிறேன்" என்று விடை பகர்ந்த **சுவாமியின் மனத்துணிவும், நற்செய்திப் பணிவும் அள்ளிக் கொடுத்தது போலல்லாமல் அளந்து கொடுத்ததுபோல் அமைந் திருப்பதைக் காணலாம்.**

இன்னொரு முறை உரும்பிராய் ஆலயக் காணி வளவில் புதுக் கிறிஸ்தவர்கள் குடியிருந்த போது அவர்களின் சண்டைகளையும், சச்சரவுகளையும், தூஷண வார்த்தைகளையும் சகிக்க முடியாத மதுரநாயகம் அடிகள், அவர்களை எப்படியாவது அவ்விடத்திலிருந்து அகற்றிவிட வேண்டும் என்ற நோக்குடன் ஒருநாள் சுவாமி அவர்களை நாடினார். தன் கருத்தைத் தகுந்த ஆதாரங்களுடன் முன்மொழிந்தார். "பிள்ளை பெற்ற வருத்தம் பெற்றவளுக்கல்லவா தெரியும். உனக்கு எப்படித் தெரியும்? " என்று மொழிந்த வேக வார்த்தைகளால் இருந்த இடம் தெரியாமல் எழுந்து சென்றாராம் அடிகள்.

இத்தனைக்கும் அவருடைய வாழ்வின் இரகசியம் என்ன? அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து தியானத்தில் அமருகின்ற சுவாமிகளுக்குக் காலை ஆறு மணிக்கு நிறைவேற்றும் திவ்விய திருப்பலியோடு பணிவாழ்வு ஒவ்வொரு நாளும் தொடரும்.

பலி வாழ்வு, பணி வாழ்வாகத் தொடர்ந்தது. இத்தனை தியாகங் களும், தியான வாழ்வும்தான் அற்புதமான ஓர் அமலமரித் தியாகியாக, மறைபரப்பாளராக சுவாமி அவர்களை இனங்காண வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பணிபுரிந்த பல இடங்களில் சுவாமியாரால் நிறுவப்பட்ட சில ஆலயங்கள்

| இடங்கள் | ஆலயங்கள் |
|---|---|
| திருநெல்வேலி | புனித சவேரியார் |
| மட்டுவில் வடக்கு | லூர்து நாயகி |
| மட்டுவில் தெற்கு | புனித சூசையப்பர் |
| வரணி | திரு இருதயநாதர் |
| நீர்வேலி | பரலோகமாதா |
| கோண்டாவில் | புனித செபஸ்தியார் |
| மல்வத்தை (மல்வம்) | திருக்குடும்பம் |
| சண்டிலிப்பாய் | புனித திரேசம்மாள் |
| முலவை | செபமாலைமாதா |
| அஞ்சனந்தாழ்வு | ஆரோக்கியமாதா |
| மாகியப்பிட்டி | புனித செபஸ்தியார் |
| கச்சாய் | புனித இராயப்பர் |
| மடத்தடி | உத்தரியமாதா |
| உரும்பிராய் | புனித மிக்கேல் |
| உடுப்பிட்டி | இரட்சகர் |
| யூலனூர் | புனித ஹென்றியரசர் |
| மூளாய் | செபமாலைமாதா |
| ஹியோமர்புரி | புனித றீற்றம்மா |
| மானிப்பாய் | புனித அந்தோனியார் |

(நெஞ்சே நினை நூலிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ④ பன்மொழிப் பண்டிதர்

அச்சுவேலி திண்ணைப் பள்ளியிலே சுவாமி ஞானப்பிரகாசர் தமது தாய்மொழியாம் தமிழ் மொழியை ஆர்வத்தோடு கற்கத் தொடங் கினார். ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காக மானிப்பாய் 'மெமோறியல்' கல்லூாயில் சேர்க்கப்பட்டார்.

தாய்மொழியோடு, உலக மொழியாம் ஆங்கில மொழியை ஓரளவு அறிந்து கொண்டு, மொழிகளின் அறிமுகம் பெறுவதற்கு அவருக்கு புனித பத்திரிசியார் கல்லூரி அடித்தளமாய் அமைந்தது.

கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு, பெருந்தோட்டப் பகுதி யிலும், இலங்கைப் புகையிரதத் தலைமையகத்திலும் தொழில் புரியக் கிடைத்த சந்தர்ப்பம் ஆங்கிலத்திலே பாண்டித்தியத்தை ஏற்படுத்தி அயல் மொழியாம் சிங்களத்தையும் தெரிய வைத்தது. இவற்றோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளின் அடிப்படைகளை அறியக் குருமடம் நாற்று மேடையாய் அமைந்தது.

குருத்துவப் பணி வாழ்வுக்கான பயிற்சிக் காலத்திலேயே நூல் களைச் சேர்ப்பதும், வாசிப்பதும், எழுதுவதும் சுவாமி அவர்களின் நாளந்தக் கடமையாய் மாறியது. ஆயரின் அனுமதியோடு 'அமலோற்பவ இராக்கினி தூதன்' என்ற இதழை ஆரம்பித்து விசுவாச உண்மை களைக் கத்தோலிக்க மணம் வீசி மலர வைத்தார்.

சீரிய சிந்தனைகளை எழுத்திலே அமைத்துவிடும் திறன் மட்டு மல்லாது அதனை வார்த்தையிலே வடிக்கின்ற வல்லமையை அவர் நன்கு பெற்றிருந்தார்.

திருத்தந்தை லியோ அவர்கள் 1901ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்திருந்தார். அந்த ஆண்டிலேயே தர்க்கப் பிரசங்கங்களை குடாநாட்டின் பல பகுதிகளில் தொடங்கினார்.

பல மொழிகளில் பாண்டித்தியத்தையும் 'மொழிகளின் உற்பத்தி பற்றிய புதிய கோட்பாட்டை'யும் எப்படிப் பெற்றுக்கொண்டார் எனச் சுவாமி அவர்களே தமது 'தமிழ் வளர்ந்த வரலாறு' எனும் நூலில் கீழ்க் கண்டவாறு சொல்லுகின்றார்.

"சேவை சம்பந்தப்பட்ட முயற்சி நிறைந்த வேலைகளை முடித்த காலம் ஒன்றில் எத்தகைய காத்திரமான பணிகளிலும் ஈடுபட முடியாத நிலையில் ஒருநாள் களைத்திருந்தேன். திரு. சி. டபிள்யூ கதிரவேற் பிள்ளை அவர்களின் புதிய தமிழ் அகராதியைக் கண்டேன். இப்பெரிய மேதை தனது வாழ்க்கைச் சாதனையான இந்நூலில் ஒருசில தெளிவற்ற செந்தமிழ்ச் சொற்கள் பற்றி என்ன வரைந்திருக்கிறார் என்பதை அறிய விரும்பி அதன் பக்கங்களைப் புரட்டினேன். விரைவில் ஒரு முக்கியமான உண்மையை நோக்கி என் கவனம் இழுக்கப்பட்டது. இதற்கு முன்னர் ஒருபொழுதும் இது என்னை அவ்வளவாகக் கவர்ந்த தில்லை. அதாவது சிறப்பாக அமைந்த ஒத்த தன்மைத்தான மொழி யின் சொற்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள சொற் கூட்டத்துள் இடம்பெறுகின்றன. கால்ட் வெல்லும், ஏனையோரும் ஒரு சில சொற்கள் சம்பந்தமான உண்மையைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இத்தொடர்பு எல்லாச் சொற்களையும் அடக்கும் என்பதை இப்பொழுதுதான் நான் காணத் தொடங்கியுள்ளேன்".

இவ்வாறு தமது அறிவுச் செல்வத்தையும், ஆக்கும் திறமையை யும், ஆய்வு முறைமைகளையும் கொண்டு மொழி ஆராய்ச்சியில் குதிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஞானப்பிரகாசர் சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இத்தாலி, பிரெஞ்சு, இலத்தீன், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப் பேசத் தெரிந்தவர்.

சமஸ்கிருதம் மூலம் பிற ஆரிய மொழிகளை அறிந்து கொண்டவர். சிங்களத்தின் வழியாகப் பாளி மொழியையும் திபெத், பர்மிய, கூர்க்க மொழிகளையும் தெரிந்து கொண்டவர்.

எபிரேயம், கிரேக்கம், டச்சு, ஜேர்மன், போர்த்துக்கீசம் போன்ற எழுபது (70) மொழிகளை அறிந்திருந்தார் என்றால் கேட்பதற்கு வியப்பாகவும், விசித்திரமாகவும் இருக்கும். இத்தனை மொழிகளையும் தெரிந்து கொள்வது சாத்தியமாகுமா? என எண்ணத் தோன்றும்.

இது சாத்தியமாகும் என்பதற்குச் சுவாமி அவர்கள் மொழியாக்கத் துறையில் புரிந்த தனிப்பெரும் சாதனையான 'சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி' சான்று பகரும்.

பல்கலைக் கழகங்கள் ஆற்ற வேண்டிய பாரிய பணியினை சுவாமி ஞானப்பிரகாசர் தனி மனிதனாக நின்று நிறைவேற்றினார்.

**அறிஞர் குழாம் கூடி, கூட்டம் போட்டு, மாநாட்டை வைத்துச் செய்ய வேண்டிய தமிழ்ப் பணியை தானே தனியொருவனாய் முன்னெடுத்தார்.**

பொது நிறுவனம் ஒன்றினாலே 'கொமிஷன்' அமைத்து, திட்டமிட்டு, நிதி ஒதுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மாபெரும் திட்டத்தை ஒருசில நண்பர்கள், நலன் விரும்பிகளின் உதவியோடு செய்திருக்கின்றார்.

ஏறக்குறைய எழுபது (70) மொழிகளைக் கற்று, பதினெட்டு (18) வகையான சான்றுகளைக் காட்டி, மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் மொழியே என்று நிறுவுகின்றார்.

இப்பெரும் 'சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி' இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டது. ஒவ்வொரு பகுதியும் பத்து (10) பிரிவுகளைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு பிரிவும் சாதாரணமாக நூறு (100) பக்கங்களைக் கொண்டதாகும். தன்னுடைய காலத்திலேயே முதல் பகுதியில் முதல் ஆறு (6) பிரிவுகளும் அச்சில் வெளிவந்ததையிட்டு அவர் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியடைந்தார். **ஏனைய பகுதிகள், அச்சேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு கறையானுக்கும், பூச்சிக்கும் இரையாகாமல் கையெழுத்துப் பிரதிகளாகப் பல ஆண்டுகள் காத்துக்கிடந்தன.**

சுவாமி அவர்களின் இறப்பினால் தடைப்பட்ட அவரது 'சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி'யின் பெரும் முயற்சி, பேரறிஞர் தாவீது அடிகளால் முன்னெடுக்கப்பட்டது. பின்னர், தாவீது அடிகளின் மரணத்துடன் செயலிழந்தது.

எனினும், ஞானப்பிரகாசர் சுவாமிகளால் அவருடைய காலத்தின் பின் வெளியிடப்படாமல் இருந்த ஏனைய பிரிவுகளை இப்போது இந்தியாவில் வெளிட ஆதரவு காட்டிய "அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம்" பாராட்டுக்குரியதே. இம்முயற்சிக்கு உறுதுணையாயிருந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும், கலாநிதி சிவலிங்கராஜா அவர்களும், தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் ஜெபநேசன் ஆண்டகை அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இப்பெரும் தமிழ்ப் பணி, "மறைபரப்பு வேலைகளின் துன்பங் களின் மத்தியில் அறிவு விருத்திக்காக மாத்திரமே கையேற்கப்பட்டுத் தொடர்ந்து செய்யப்பட்ட அன்பின் முயற்சியாகும்". (அகராதியின் முன்னுரை பக். vii) என்று கூறுகையில் சுவாமியின் தமிழ்ப்பணியை வியக்காமல் இருக்க முடியாது.

இருப்பினும் மொழியியலாளர்களும், மொழிவல்லுநர்களும் 'சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி'யின் நிறுவல்கள், முடிவுகள், அத்தனையையும் ஏற்றுக் கொள்வதில்லை. நியாயபூர்வமான வாதங் களையும், அர்த்தமுள்ள கேள்விகளையும் இதன்பால் எழுப்புகின் றார்கள் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதே ஆகும்.

எனினும் உலகின் பல அறிஞர்களின் கவனத்தை இப்பெரும் ஆராய்ச்சி ஈர்த்ததென்பதும், இதனால் இப்பெரும் மேதையின் பணியை எண்ணி அறிஞர்கள் மலைத்துப் போனார்கள் என்பதும் உண்மையே.

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் வார்த்தையில் கூறுவதானால் 'நல்லுணர்ச்சியுள்ள தமிழ்ப் பெருமக்கள் இச்சொல் வல்லவனை நினைத்துத் தமிழ்ப் பணி புரிய வேண்டும்' என்று தமிழ் வாழவும், அதனால் தமிழர் வளரவும் அழைப்பு விடுப்பது இங்கு நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑤ தர்க்கப் பிரசங்கத்தின் தந்தை

சிறு வயதிலிருந்தே நாவன்மை மிக்கவராக வளர்ந்தார் சுவாமி ஞானப்பிரகாசர். அவருடைய பேச்சைக் கேட்டவர்கள் அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க வேண்டும் என்ற உணர்வைப் பெற்றார்கள். சிந்தனையில் தெளிவும், அதனைச் சிறப்பாக எடுத்துரைக்கும் ஆற்றலும் அவரிடத்தில் இருந்தது.

சுவாமி ஞானப்பிரகாசர் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு முன்பாகவே போதனை - பிரசங்கப் பணியை ஆரம்பித்தார். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஆண்டு 1901. அவ்வாண்டு யூபிலி ஆண்டாகத் திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதனால், ஆயரின் அனுமதியோடு இத்துறையில் ஆற்றல்மிக்க சில குருக்களின் துணையோடு யாழ் குடாநாட்டின் பல இடங்களிலும் தர்க்கப் பிரசங்கங்களினூடாக யூபிலி ஆண்டின் நற்செய்தி அறிவிப்புப் பணியைச் செய்து வந்தார்.

கத்தோலிக்கர்களுக்கு விசுவாசப் போதனைகளைப் புகட்டவும், ஏனையோருக்கு மறையுண்மைகளை விளக்கவும், நல்வாழ்வுக்கான வழிகளைக் காட்டவும் இத்துறை பயன்பட்டது. மறைபரப்புப் பணி நிலையங்களிலும், மடு போன்ற திருத்தலங்களிலும் திருநாள் ஆயத்த நவநாள்களின் இறுதி மூன்று நாள்களிலும் தர்க்கப் பிரசங்கம் நடைபெற்றது. இதனைக் கேட்கப் பல இடங்களிலிருந்து கால்நடையாகவும், மாட்டுவண்டி மூலமும் மக்கள் பெருங்கூட்டமாக வந்து கூடுவர்.

தர்க்கப் பிரசங்கம் எப்படி நடைபெற்றது என்றால், மாலை வேளையில் முன்நிலவுக் காலத்தில், ஆலய முன்றிலில் அல்லது திறந்த வெளியில் மக்கள் கூடியிருக்க, இரு ஆயத்தம் செய்யப்பட்ட மேடைகளில் இரண்டு அருட்தந்தையர்கள் ஒவ்வொருவராக நின்றுகொண்டு, ஒருவர் குடும்பத் தலைவனாக அல்லது மாணவனாக அல்லது பொதுமகனாகப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கேள்விகளையும், விளக்கங்களையும், சந்தேகங்களையும் தொடுக்க, மற்றவர் அதற்கான விடைகளையும், விளக்கங்களையும் கொடுக்கின்றவராக இருப்பதே தர்க்கப் பிரசங்கம் நடைபெறும் முறையாகும். இப்பிரசங்கம் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் கூட நடைபெறுவதுண்டு. நீண்ட நேரம் நடைபெறுவதால் இடையிடையே கவிகளும், பாடல்களும் பாடப்பட்டு, இசை இசைக்கப்படும்.

இக்கலையின் வழியாக மறைபணியில் ஈடுபடுபவர்கள் மக்களின் அறிவு, மொழித்திறன், குருட்டு நம்பிக்கைகள், நகைச் சுவைகள், பிரச்சினைகள், பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றை அறிந்திருப்பது அவசியமாகும். அப்போதுதான், மக்களின் உள்ளார்ந்த வினாக்களுக்கு விடை பகர முடியும். அவர்களுடைய வாழ்வைத் தொடமுடியும்.

சுவாமி ஞானப்பிரகாசர் இருபத்தினான்குக்கும் (24) மேற்பட்ட தர்க்கப் பிரசங்கங்களைப் பிரசுரித்திருக்கின்றார். அவற்றில் "குருவில்லா வித்தை", "மெய்பாதி பொய்பாதி", "கணக்குண்டு வழக்குண்டு", "மாதாவோ அம்மனோ" போன்ற தர்க்கப் பிரசங்கங்கள் ஊடாக பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை கொண்டவர்களின் கொள்கைகளைச் சாடியுள்ளார் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

இதனை விளங்கிக் கொள்வதற்கு, சுவாமி அவர்கள் வாழ்ந்த காலம், சமூகப் பின்புலம், சமயப் பின்னணி, அக்கால இறையியல் சிந்தனை ஆகியவற்றினை அறிந்திருப்பது அவசியமாகும்.

சுவாமி ஞானப்பிரகாசர் சமயப் பூசல்கள், எதிர்ப்புகள் நிறைந்த காலப் பகுதியில் வாழ்ந்து மறைப்பணியாற்றியவர். அதனால், "எதிரியைத் தாக்குவதே நல்ல பாதுகாப்பாகும்" என்ற கால கட்டத்தில் வாழ்ந்த சுவாமிகள் "தன் காலத்தில் தனக்குக் கிடைத்த சமயப் பாதுகாப்பு முறைகளைப் (APOLOGETICAL METHOD) பயன்படுத்தி சமயப் பணி செய்தார்" என்ற கலாநிதி வே. அந்தனிஜான் அழகரசன் அடிகளின் கூற்றினை நோக்குவது சுவாமி ஞானப்பிரகாசரின் மனநிலையினைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும்.


சுவாமி ஞானப்பிரகாசரின் தர்க்கப் பிரசங்கத்தைக் கேட்க அன்று மாட்டு வண்டியில் மடுவுக்குச் சென்று வந்தவர்களில் அமரரான எனது அப்பப்பா அண்ணாவியார் செபஸ்தியான் அவர்களும் ஒருவர். நான் சிறுவனாய் இருந்தபோது அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் நினைவில் இருக்கின்றன. "சுவாமி ஞானப்பிரகாசர், அருள் சுரக்கும் வார்த்தைகளால் சுவிசேஷத்தை அள்ளிச் சொரிவார். அனைத்து மக்களும் நீண்ட, நெடிய, பலமணிநேரப் பயணத்தின் பின்னரும், களைப்படையாது, சலிப்படையாது, கவனமாக அவர் சொல்வதைக் கேட்பார்கள். போட்ட வைக்கோல் அப்படியே கிடக்க, விட்ட இடம் விலகாமல் காளை மாடுகள் அப்படியே அக்காட்சியைப் பார்த்து, இரசித்து அமைதியாக அசைபோட்டுக் கொண்டிருக்கும்".

'என்னத்தையாவது கொஞ்ச நேரம் பேச வேண்டும்', 'என்னமாவது சற்று நேரம் சொல்ல வேண்டும்' என்று சிந்திக்கின்ற பேச்சாளர்களுக்கும், தலைவர்களுக்கும் சுவாமி ஞானப்பிரகாசர் நல்லதொரு முன்மாதிரிகை.

**சொல்ல வேண்டியதை, பேச வேண்டியதை, பிரசங்கிக்க வேண்டியதை எழுதி, வேண்டாததை விலக்கி, வேண்டியதை உள்வாங்கி, தேவையற்றதை நீக்கி, தேவையானதைச் சேர்த்துச் சரி பார்த்த பின்னர்தான் பேசவோ, பிரசங்கிக்கவோ செய்வார்.** தம் உதவிக் குருக்களையும் இப்பயிற்சியிலே பயிற்றுவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி புகட்டுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ⑥ வரலாற்று வித்தகன்

வரலாற்று நிகழ்வுகளையும், ஆதாரங்களையும், நடயங்களையும் ஆராய்ந்து, நேர்மையோடும், உண்மையோடும், நடுவுநிலைமை தவறா மல், தம்முடைய விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாமல், தனது முடிவுகளைப் பிறர் மீது திணிக்காமல் வரலாறு படைப்பது ஒரு வர லாற்று ஆசிரியனின் கடமையும், பொறுப்பு வாய்ந்த பணியுமாகும்.

ஈழத்தின் தமிழ் வரலாற்று ஆசிரியர்களாக ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, க. வேலுப்பிள்ளை, முதலியார் செ. இராசநாயகம், சி. வை. தாமோதரம்பிள்ளை, கரல். விசுவநாதபிள்ளை, வி. கனகசபைபிள்ளை, தி. க. கனகசுந்தரம்பிள்ளை, தா. செல்லப்பாபிள்ளை, க. சிவபாத சுந்தரம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற தமிழ்ப் பெருமக்களைச் சொல்லலாம்.

இவர்களில் நடுவுநிலைமை பிறழாமல், பாரபட்சம் இல்லாமல் உள்ளதை உள்ளவாறு கூறும் வரலாற்று ஆசிரியர்களில் சுவாமி ஞானப்பிரகாசரும் குறிப்பிடத்தக்க ஒருவர். அவர் துணிவையும், வரலாற்று மனப்பான்மையையும் இக்கால அறிஞர்கள் பலர் கூர்ந்து நோக்குவது இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதே.

சுவாமி அவர்கள் வரலாறு எழுதும் முயற்சியிலே "பண்டைத் தமிழர் வரலாறு", "யாழ்ப்பாணச் சரித்திரம்", "யாழ்ப்பாணக் கத் தோலிக்க வரலாறு" போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த கருப் பொருள்களில் நூல்களை யாத்திருக்கின்றார்.

"தமிழரின் பூர்வ சரித்திரம்" என்ற நூலில் பழந்தமிழரது சமூக, சமய நிலைகளையும், "சமயமும், தமிழரின் ஆதி இருப்பிடமும், பழஞ் சீர்திருத்தமும்" என்ற நூலில் தமிழரின் தோற்றம் பற்றியும் சொல் கின்றார். 'தமிழரின் ஆதி இருப்பிடம் மத்திய தரைக் கடற் பிரதேசம்' என்ற கொள்கையை நிறுவ முயல்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் கூட சில கற்றோரிடம், கல்விமான்களிடம் நின்று நிலவி வரும் கருத்து என்னவென்றால்; கத்தோலிக்க போதனை வலுக் கட்டாயமான மதமாற்றத்தை ஏற்படுத்தியதென்பதும் இவ் இலக்கை அடையவே இந்துக் கோவில்களும், பௌத்த விகாரைகளும் தகர்க் கப்பட்டன என்பதுமாம்.

இத்தவறான வரலாற்று ஆய்வின் முடிவுகளை வெளியிட்ட ஆங்கில எழுத்தாளர்களான எமர்சன், ரெனண்ட் போன்றோரையும் இவர் களைப் பின்பற்றி யாழ்ப்பாண வரலாறு எழுதிய வரலாற்று ஆசிரியர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களையும் கண்டித்ததோடு மட்டும் நின்று விடாமல்; தவறான வரலாற்று முடிவுகளைத் திருத்தி, வரலாற்று விளக் கங்களைப் படைக்கின்றார் சுவாமி ஞானப்பிரகாசர். இதனை அக் காலத்து அரசியல் சமூகப் பின்னணிகளைக் கொண்டு ஆதாரங்களுடன் விளக்குகின்றார்.

கத்தோலிக்க சமயப் போதனை வலுக்கட்டாயமாகச் செய்யப் படவில்லை என்பது சுவாமி அவர்களின் அசைக்க முடியாத வரலாற்று ஆய்வின் முடிவாகும். அதாவது கத்தோலிக்க அருட்பணியாளர்களின் அயராத போதனைப் பணியும், அரசாட்சி புரிந்த போர்த்துக்கேய அரசின் சலுகைகளும் கத்தோலிக்க விசுவாசம் பரவ ஏதுவாயிருந்த காரணிகளாகும் என்பது சுவாமியின் ஆய்வின் முடிவாகும்.

ஆனால், போர்த்துக்கேய அரசு கத்தோலிக்கருக்கு அளித்த முதலிடங்கள், பதவிகள், சலுகைகள், எல்லாம் துன்புறுத்தல்களுக்கும், கொடுமைகளுக்கும் சமமானவை என்றும், மனித நேயமற்ற செயல்கள் என்றும் கோடிட்டுக் காட்டுகிறார். **இவ்வாறு வரலாற்றை விமர்சிப்பது சுவாமியின் கலப்படமில்லாத வரலாற்றுத் தூய்மையை எடுத்துக் காட்டுகிறது.**

இரண்டாவதாகப் போர்த்துக்கேய அரச அதிகாரிகளே இந்துக் கோவில்களையும், பௌத்த விகாரைகளையும் உடைத்துத் தகர்த்தனர். இது வெறுமனே அரசியல் இலக்கைக் கொண்டதாக இருந்திருக்கின் றது. அதாவது தமது போர்த்துக்கேய அரசாட்சியை நிறுவவும், மக்க ளைப் பயப்படுத்தவும், அரசர்களைப் பணிய வைக்கவும் மேற்கொள்ளப் பட்ட கண்மூடித்தனமான செயல்கள் என்று வரலாற்றைச் சரியான திசையில் வடிவமைக்கின்றார். அதுமட்டுமன்றி, உலகில் பெரும் போர்கள் மூண்ட போதெல்லாம் இத்தந்திரோபாயமே கடைப்பிடிக்கப் பட்டது என்று உலக வரலாற்றின் படிப்பினைகளைக் கொண்டு இவ் வுண்மைகளை நிறுவுகின்றார் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑦ கலைக் களஞ்சியம்

இறைவன் இவ்வுலகைப் படைத்தான் என்கின்றோம். அதனால் தான் கடவுளும் கலைஞனாகின்றார். படைப்பின் சிகரமாக மனிதனைப் படைத்தார். படைப்பை காத்து, வளர்த்து, விருத்தி செய்வது மனிதனின் அளப்பரிய அழைப்பாகும். ஆகவே, இவ் **ஆக்குந் திறனிலே பங்கெடுக்கும் ஒவ்வொரு மனிதனும் கலைஞனே, இறை தந்தையின் உன்னத கருவியே.**

ஒரு சிறந்த கலைஞன் நல்ல சுவைஞனாகவும் இருப்பான். ஆகவேதான், இறைவன் 'நன்று இது மிக நன்று', என்று சொல்லி தான் உருவம் கொடுத்த அத்தனை படைப்புக்களிலேயும் மகிழ்ச்சியுறுகின்றார்.

பெற்ற கலை இன்பத்தைத் தான் வாழும் சமுதாயத்திற்குக் கொடுக்கும் படைப்பாளியாகவும் கவிஞன் செயற்படுவான். கலைஞன் கலைகளைப் படைத்துக் கொண்டிருக்க சுவைஞன் அதிலே பங்கெடுத்துக்கொண்டு பங்காளியாகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களும் சிறந்த ஒரு கலைஞனே. சிறு பராயத்திலிருந்தே சங்கீதம் பாடவும், மத்தளம் அடிக்கவும், வயலின் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். புனித பத்திரிசி யார் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் தமது சிறிய தந்தை தம்பிமுத்துப்பிள்ளை எழுதிய எஸ்தாக்கியார் நாடகத் தில், எஸ்தாக்கியாரின் மூத்த மகனாக சுவாமி ஞானப்பிரகாசர் நடித் துப் பலருடைய பாராட்டுக்களைப் பெற்றார்.

இரண்டு தமிழ் நாடகங்களையும், ஒரு ஆங்கில நாடகத்தையும் எழுதியிருக்கின்றார். அவைகள் மறைந்து போயின. சுவாமி அவர்கள் கிறிஸ்தவ நாடகங்களை ஊக்குவித்தும், நாடக மன்றங்களை உரு வாக்கியும், கலைகளை வளர்த்திருக்கின்றார்.

ஆலயத் திருநாள்களின்போது புனிதர்களின் வாழ்க்கை வரலாற்று நாட்டுக் கூத்துக்களையும், தவக்காலத்தில் "பாஸ்கு" நாடகங்களையும் - திருப்பாடுகளின் காட்சியையும் மேடையேற்றிக் கலைகள் வளர அரும்பணி புரிந்திருக்கின்றார். கலைவழி இறைபணி - நற்செய்திப் பணி ஆற்றியிருக்கின்றார்.

அருள்திரு. பாவிலுப்பிள்ளை அ.ம.தி., சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் கலைப் பணியைப் பற்றிக் குறிப்பிடும் போது, "ஞானம் (சுவாமி ஞானப்பிரகாசர்) ஒவ்வொரு கோவில் திருநாளிலும் எப்படி யாவது ஒரு நாட்டுக் கூத்தைப் போடுவார். இரவிரவாக ஆடப்படும். இரவிரவாக விழித்திருந்து சுவைத்துக் கொண்டிருப்பார். இந்நாடகங் களைக் கண்டுகளிக்க மக்கள் வந்து திரளாகக் கூடுவார்கள். காட்சி களுக்கு இடையே எழுந்து நின்று ஞானம் பெரியதொரு பிரசங்கத் தையே ஆற்றிவிடுவார்!... அப் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கியும், நாடகத்தில் வருகின்ற காட்சி அமைப்புக்களை எடுத்துக் கூறியும் மக்களுக்கு எளிதாகப் புரியவைப்பார்." என்று தம் இளமைக் கால அனுபவத்தை மகிழ்ச்சியோடு கூறினார் அன்பிற்கினிய அடிகள்.

கலையினுடைய பயனையும், அதன் பலனையும், பண்பையும் பற்றிக் குறிப்பிடும் சுவாமிகள் திருநெல்வேலியில் நடைபெற்ற திருப் பாடுகளின் காட்சியில் குறிப்பிட்ட கருத்து நோக்கத்தக்கது. "One Passion show makes more devotional impact than a thousand sermons and retreats." ("ஆயிரம் பிரசங்கங்களையும், ஞான ஒடுக்கங்களையும் விட ஒரு திருப்பாடுகளின் காட்சி மிகுந்த பக்தி நிலையை ஏற்படுத்தக் கூடியது.")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑧ எழுதுகோலை ஏந்தியவர்

சிறியதந்தை தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் இலக்கிய ஈடு பாடும், எண்ணமும், எழுத்தும், அச்சக அனுபவமும், இறை ஆர்வமும் சிறுவனாக இருந்த சுவாமி ஞானப்பிரகாசரிலும் இருந்தது. பெரிய விருட்சம் சிறியதொரு விதையில் அமைதியாக இருப்பதுபோல காலம் வரும் வரை காத்திருந்தது.

"சன்மார்க்க போதினி" என்ற பத்திரிகையை தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் நாற்பத்தேழு (47) ஆண்டுகளாக நடத்திவந்த எழுத்தனுபவம் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களையும் எழுத்துலகில் பிரவேசிக்கவும், பிற்காலத்தில் பிரகாசிக்கவும் வைத்ததில் பெரும் பங்கு வகித்தது எனக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

1897ஆம் ஆண்டில் சுவாமி ஞானப்பிரகாசர் "அமலோற்பவ இராக்கினி தூதன்" (Messenger of Our Immaculate Queen) என்ற தமிழ் மாத இதழை வெளியிட்டார். இதனை 1905 ஆம் ஆண்டில் ஆங்கிலத்திலும் வெளியிடலானார். 1912 ஆம் ஆண்டில் 'பாதுகாவலன்' வார இதழாக வெளிவரத் தொடங்கியதும் "அமலோற்பவ இராக்கினி தூதன்" நிறுத்தப்பட்டது. இவ்விதழின் காரண கர்த்தாவாகவும், பத்தி ரிகை ஆசிரியராகவும் பணி புரிந்தார். இலங்கையில் முதற் கத்தோ லிக்க வார இதழான பாதுகாவலன் [இப்போது அதன் வயது நூற்றி யிருபத்தைந்து (125)] சுமார் இருபது (20) வருடங்களுக்கு மேலாக சுவாமி அவர்களின் மேற்பார்வையில் இயங்கியது.

பல ஆண்டுகளாக அச்சு வாகனம் ஏறாமல் கிடந்த அருட் தந்தையர்களான யாக்கோமே கொண்சால்வேஸ், கப்ரியேல் பச்சேகோ, கயிற்றானே அந்தோனியோ போன்றோர் எழுதிய முப்பதுக்கும் (30) மேற்பட்ட நூல்களை மொழி பெயர்ப்புச் செய்து பதிப்பித்தும் இருக்கின்றார். இவற்றில் "யோசேவாஸ் முனிவர் சரித்திரம்", "சத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத போதகச் சுருக்கம்", "லூர்தில் நடக்கும் அதிசயங்கள்" போன்ற நூல்கள் அடங்கும்.

"தெய்வீக விருந்து", "மேற்றிராணியார் அபிஷேகத் திருச்சடங்கு", "பக்திப் பொக்கிஷம்", நித்யாராதனை" போன்ற 14 நூல்களைப் பக்திச் சுவை சொட்டச்சொட்ட எழுதியுள்ளார். "எனது பூசைப் புத்தகம், திவ்விய பூசை மகத்துவம்", "புதிய ஏற்பாட்டுப் பலி", திருச்சபையும் அதன் போதகங்களும்" போன்ற முப்பதுக்கும் (30) மேற்பட்ட சமய நூல்களையும் படைத்திருக்கின்றார்.

ஈழ நாட்டுத் திருச்சபை , யாழ் திருச்சபையின் வரலாறு அதன் அக்கால வாழ்வு, பணி பற்றியும் மூன்று (3) நூல்களை ஆங்கிலத் திலும் ஆக்கியிருக்கிறார்.

"xxv Years of Catholic Progress, Jaffna"
(25 ஆண்டு கத்தோலிக்க வளர்ச்சி, யாழ்ப்பாணம்)

"Catholicism in Jaffna"
(யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கம்)

"A History of the Catholic Church in Ceylon"
(இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையின் வரலாறு)

"Life of Christ Critilly Examined" என்ற கிறிஸ்து நாதரின் வாழ்வு பற்றிய ஆராய்ச்சி நூல் தமிழ் நூற் குவியலில் தனித்துவமான ஓர் இடத்தைப் பெற்று விளங்குவது சுவாமி அவர்களின் எழுத்தாற் றலை மேலும் ஒருபடி உயர்த்துகிறது.

"ஞான உணர்ச்சி" என்பது தெள்ளிய தமிழில் சிறப்பாக எழுதப் பட்ட சிறு நூலாகும். இதனை வீரமாமுனிவரே எழுதினாரென இதுவரை காலமும் எண்ணப்பட்டது. ஆனால், இதன் ஆசிரியர் யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமிகளே என்று இடித்துரைத்துப் பல அறிஞர் களின் கருதுகோள்களை அதிரச் செய்தார் சுவாமி அவர்கள். இருபத்தினான்கிற்கும் (24) மேற்பட்ட தர்க்கப் பிரசங்கங்களை வெளியிட்டிருக்கின்றார்.

அனைத்திற்கும் மேலாக "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி"யை எழுதி அதன் இரண்டு பகுதிகளில் முதற் பத்துப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131270

# தேசிய ரீதியில் கௌரவம் பெறுகின்றார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஆறையும் (06) அச்சேற்றி வெற்றி கண்டமை உலக அறிஞர் களையே வியக்க வைக்கிறது.

ஏனென்றால், இத்தனை எழுத்துக்களும் சுவாமியின் மறைபரப்புப் பணிகளோடு ஆற்றப்பட்டவையே ஆகும். இதனை 'நெஞ்சே நினை' என்ற நூலின் ஆசிரியர் அமுது கூறும் விதம் அருமையானது. "ஒரு விடயத்தை எழுதும்போது சில வரிகள் எழுதிவிட்டு எழுந்து நின்று ஒரு நூலை எடுத்துப் புரட்டுவார். அதில் சில வரிகளைப் பார்வையிட்ட பின் வேறொரு நூலைத் தூக்கி ஏதோ கூர்ந்து நோக்குவார். சாளரத்தினூடே நான்கு ஐந்து சிறிதும் பெரிதுமான தலைகள் தெரியும். அவர்களிடம் போய் குசலம் விசாரித்துவிட்டு அவர்கள் தொல்லை களுக்கு ஆறுதலளித்து வழியனுப்புவார். மீண்டும் எழுந்து கோலைத் தொடுவார். 'ஓடு போட்ட காசு' என்று ஒருவன் தலையைச் சொறிவான். அவனுடைய கணக்குகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் போது, உபதேசியார் வந்து, வியர்வையைத் துடைத்துக் கொண்டே ஒரு கிழமையாக நடைபெற்ற வரலாறுகளை விபரிப்பார். அடுத்த வேலையை அவருக்குக் குறிப்பிடுவார் சுவாமியார். திரும்பவும் அப்புத்தகத்தில் கைகொண்டு போவார். யாரோ ஒரு தமிழறிஞன் கதவில் தட்டும் சத்தம் கேட்கும்.... இந்த ஆறுதலற்ற வாழ்க்கையில் அவர் எழுதித்தள்ளிய நூல்களை நினைத்தால் . . .!"

இக் கருத்தோடு பேரருள்திரு. கலாநிதி எட்மண்ட் பீரிஸ் அ.ம.தி. பின்வருமாறு கூறுவது நோக்கத்தக்கது. "இத்தீவில் எந்தத் தமிழ் எழுத்தாளனாவது இவர் எழுதியவைகட்கு மேலாக எழுத முடியுமா என ஒருவர் வியப்படையலாம்." பிரசுரங்களாகவும், நூல்களாகவும், வெளி யீடுகளாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும் சுவாமி எழுதியவை தனிக் கட்டுரைகள் தவிர்ந்தவையாக எமக்குத் தெரிந்த வரையில் நூற்றியிருபத்தொன்று (121) என்று அறியக் கிடக்கின்றது. இதில் சில நூல்கள் பதிப்பிக்கப்படாமல் இருக்கின்றன. இவரால் பதிப்பிக்கப்பட்டும், மொழிபெயர்க்கப்பட்டும் அச்சேறியவை இன்னொரு நிரலில் நிரைப்படுத்த வேண்டும்.

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எழுதிய நூல்களும், பிரசுரங் களும் பின்வருமாறு:

**வரலாற்று நூல்கள்:**

1. Kings of Jaffna during the portuguese period (1916)
2. வையா வசனம் (1921)
3. யாழ்ப்பாண வைபவ விமரிசனம் (1928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. செகராசசேகரன்
5. History of Jaffna under the portuguese, and Dutch Rule - கௌமுதி
6. யாழ்ப்பாணத்து தொல் குடிகள்
7. Ancient Kings of Jaffna (Incomplete)
8. தமிழரின் ஆதி இருப்பிடமும், பழஞ் சீர்திருத்தமும் Early history of the Tamils and their religion (1932)
9. தமிழரில் சாதி உற்பத்தி Origin of Caste among the Tamils (1920)
10. Indian ancient chronology and civilization (1921)
11. Life from the Excavations of the Judur Valley
12. History of the Catholic Church in Ceylon (1505-1602)
13. Early History of the Ancient popes (18-4-22)
14. Catholicism in Jaffna (1926)
15. 25 Years of Catholic progress in the Diocese of Jaffna (1925)
16. ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கோவில் வரலாறு (19th June 1932)
17. Origin and history of the shrine of Madhu
18. இலங்கை வேதசாட்சிகள்
19. தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்
20. தர்க்க சாஸ்திர சுருக்கம்
21. பரராச சேகரன் *
22. இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் சரித்திரம் *

**ஏனைய மதங்கள் பற்றியவை:**

23. Philosophical Saivaism or Saiva Siddhanta (1-2-17)
24. சுப்பிரமணிய ஆராய்ச்சி (1916)
25. பிள்ளையார் ஆராய்ச்சி (6-9-21)
26. History aspect of Christianity and Buddhism
27. மிருக பலி ஆராய்ச்சி (24-2-17)

**வாழ்க்கை வரலாறுகள்**:

28. அற்புத வரத்தி
29. Life of Cecilia Rasamma (26-12-1900)
30. உபதேசியார் சந்தியாப்பிள்ளை தற்சரிதை
31. ஸ்ரீமான் என். ஆர். முத்துக்குமாரு
32. Chrysanthus Daria

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. அர்ச். இசிதோர்
34. சாங்கோ பாங்க சுவாமிகள்

**சமய சம்பந்தமான நூல்கள்:**

35. மோட்ச பாதை
36. செபச் செண்டு
37. திவ்விய அவுஷதம்
38. பக்தி பொக்கிஷம்
39. பரிசாரகன் கைந்நூல்
40. மோட்ச கபாடம்
41. காவற் சம்மனசு
42. நித்திய ஆராதனை
43. திருப்பதி யாத்திரிகர்களின் துணை
44. வாலிப வழிகாட்டி
45. கதா வினோத பூங்கொத்து
46. ஆண்டவர் ஆய்ந்த கனி
47. அருட் பெரும் சோதி *

**துண்டுப் பிரசுரங்கள்:**

48. இரண்டு படுபொய்கள்
49. ஒரு பெருங் கடமை
50. இராச பாதை
51. ஆத்துமம்
52. சற்குரு
53. கடவுளின் லட்சணம்
54. விக்கிரக ஆராதனையும், சுரூப வணக்கமும்
55. மறு பிறப்பு ஆட்சேபம் I
56. மறுபிறப்பு ஆட்சேபம் II (29-10-1916)
57. சைவர் ஆட்சேப சமாதானம் (1907)
58. பரிபூரண வஸ்து
59. உலக உற்பத்தி
60. கிறிஸ்துவின் கடவுட்தன்மை (11-6-10)
61. ஈடேற்ற வழி (28-2-1927)
62. புதுச் சைவம் (3-8-13)
63. ஐசவரும், மச்ச மாமிசமும் (1-1-115)
64. சமய ஆராய்ச்சியும், நேர்மையும் (3-12-15)
65. An American Hindu on Hinduism
66. A Critique of Mr. Phelp's Letter
67. Protestant sects and the Bible

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. Universal Religion
69. 2nd Epistle to the Padre Gabriel Jovan
70. Tactics of the Tamilian
71. Where Christianity and other Religions meet (1923)
72. பிரபஞ்ச விசார நிரூபணம்
73. உழவு சால் சம்பாஷணை
74. சாதுவின் உண்மை
75. சின்னக் கதிர்காமம்
76. ஏன் மடுவுக்கு வந்தோம்
77. செபமாலைத் தியானம்
78. மறு பிறப்பு சமாதானம்
79. புனிதர் வரலாறுகள் விமர்சனம்
80. The Great Promise
81. Sacred Hymns

**தர்க்கப் பிரசங்க பிரசுரங்கள்:**

82. குருவில்லாத விந்தை (23-6-28)
83. மெய்பாதி பொய்பாதி (10-6-29)
84. கணக்குண்டு வழக்குண்டு (18-6-29)
85. பாவத்தைத் தீராத் தீர்த்தம் (16-6-30)
86. மாதாவோ - அம்மனோ (21-6-32)
87. எல்லார்க்கும் பொது வழி (15-6-33)
88. இடுக்கமான வாசல் - நெருக்கமான வழி (18-6-29)
89. சமதர்மத்தின் தப்பறை (21-6-32)
90. உலகத்தின் ஞான சூரியன் (3-6-1938)
91. இரட்சணிய பலி (10-6-39)
92. செபமாலை மாதா (10-6-40)
93. ஈடேறுவோரின் திருக்கூட்டம் (12-6-41)
94. Life of Christ critically examined (29-5-31)
95. தெய்வீக விருந்து (1904)
96. திவ்விய பூசை மகத்துவம் (1948)
97. லூர்த்தில் நடக்கும் அதிசயங்கள்
98. தபசுகாலப் பிரசங்கம்
99. ஆண்டவர் சரித்திரம் I (1937)
100. ஆண்டவர் சரித்திரம் II
101. ஞான ஒடுக்கப் பிரசங்கம்
102. கத்தோலிக்க திருச்சபையும் அதன் போதகங்களும் (1237)
103. எனது பூசைப் புத்தகம் (தமிழாக்கம் - 1939)
104. மெய்க் குருமாரும் பொய்ப் போதகங்களும் (6-2-34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. உரும்பிராயில் வேதந் தொடங்கிய வெள்ளி யூபிலி (14th Sep.1933)
106. ஆதிச் சமயம் எது? (23-12-1904)
107. எம்மதமும் சம்மதமா? (Sep. 1934)

**தமிழ் மொழி:**

108. தமிழ் மொழி ஒப்பியல் அகராதி (6ம் பாகம் 1938)
109. How Tamil was built up (1927)
110. தமிழ் சொற்பிறப்பாராய்ச்சி (18th April 1932)
111. தமிழ் மொழி ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பு I (1973)
112. An English – Tamil Dictionary (Manuscript) *
113. Some Laws of Dravidian Etymology
114. The Dravidian Element in Sinhalese
115. Root words of the Dravidian group of Languages
116. The proposed Comparative Tamil Lexicon (1929)
117. The law of Infilial Consonants
118. தர்க்கம் (Logic) 5th June 1932
119. சொற்பிதிர் வழி (1928) *
120. விஞ்ஞான அகராதி *
121. சிங்களமும் தமிழும் *

சுவாமி ஞானப்பிரகாசர் இவ்வளவு நூல்களை எழுதியது ஆச்சரியத்தைத் தருகிறதல்லவா! . . . அவர் எழுதியதாக எமக்குக் கிட்டிய நூல்களின் தொகுப்பைத் தருகின்றேன். அவர் பதிப்பித்த நூல்களின் தொகுப்பு இங்கு தரப்படவில்லை. அவை இன்னொரு நிரலில் தொகுக்கப்பட வேண்டியவை! . . .

[ * ] குறியிடப்பட்ட நூல்கள் அச்சேறாதவை.

**துணை நூல்கள்:-**

(1) சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு நினைவுமலர் 1875-1975 - நூற்றாண்டு விழாக்குழு.

(2) நெஞ்சே நினை - அமுது - 1975

(3) பாதுகாவலன் - 17.01.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑨ சகல கலா விற்பன்னர்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் பிறப்பால் தமிழ்ச் சமூகமும், துறவு நிலைப் பணி வாழ்வால் யாழ் திருச்சபையும், தமிழ் மொழித்தொண்டால் உலக அறிஞர் பெருமக்களும், இறை சேவையால் ஏழை எளியவர்களும், வாழ்வையும், வழியையும் நிறைவாகக் கண்டு கொண்டனர் என்றால் அது எவ்வகையிலும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்க முடியாது.

சுவாமி அவர்களின் வாழ்க்கை முறை பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றது. காரணம் உலகமே போற்றும் இப்பெரும் தமிழ் மகன் ஓலைக் குடிசைகள், கொட்டில்களில் வாசித்தும், மரநிழல்களின் கீழ் அறிவைப் பெருக்கியும் மாட்டு வண்டி, மிதிவண்டியில் பயணித்தும் "மலை போல் மறைப்பணியும், இமயம் போல் இலக்கியப் பணியும்" ஆற்றி உலகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றார்.

எல்லா வகையான அறிவையும், ஆராய்ச்சியையும் தாமே கற்றுக் கொண்டார் என்பதற்கு சுவாமி அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை, 'நெஞ்சே நினை' என்ற நூலின் ஆசிரியர் அமுது சுவைபடக் கூறுவதை இங்கு நோக்கலாம். "பண்டிதர் ஒருவர் சுவாமியிடம் வந்து 'சுவாமி! நீங்கள் தொல்காப்பியம் என்ற இலக்கணத்தை யாரிடம் பாடம் கேட்டீர்கள்?' என வினவினார். சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே, 'இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் என்போரிடத்தில் கற்றேன்' என்று கூறிச் சிரித்தார். பண்டிதர் விழித்தார்."

அறிஞருக்கு அறிவியலின் உச்சத்தைக் காட்டக்கூடிய மாமேதை சுவாமி ஞானப்பிரகாசர். அதே வேளை பரம ஏழைக்கு ஆக்கத் திறனையும், பாமரனுக்கு அறிவுச் சுடரையும் ஏற்றவல்ல ஆற்றல்மிக்க ஆசிரியருமாவார்.

இருப்பினும் "சுவாமி ஞானப்பிரகாசர்....... போதித்தார், கல்வி கற்பித்தார். நூல்களைப் படித்தார். தாமே நூல்களை எழுதினார் அல்லது மற்றவர் எழுத தாம் சொல்லிக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் கல்விச் செருக்குடையவராக இருந்தவரல்லர். ஒவ்வொருவரையும் மென்மையான புன்முறுவலோடும், அன்பான வார்த்தையோடும் வரவேற் பார்" என்று ஆயர் எட்மண்ட் பீரிஸ் அவர்கள் கூறுவதில் நிறைய அர்த்தம் உண்டு.

ஏழைகளின் எளியவர்களின் நண்பராக, ஒதுக்கப்பட்டவர்களின் ஓங்கிய குரலாக, திருமறையின் தூதனாக, சாதனை படைத்த போத கராக, பலமொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பண்டிதராக, கலைக் களஞ்சியமாக, கலைகளைப் படைக்கும் கலைஞனாக, அறிவை ஊட்டும் நல்லாசிரியராக, வரலாற்றை வடிவமைத்த் வித்தகராக, பல நூல்களின் பதிப்பாசிரியராக, பல்லாண்டுகள் பத்திரிகை ஆசிரியராக, பல பக்தி நூல்களின் படைப்பாளனாக, எழுதுகோலை ஏந்தியவராக, பல பக்தி இயக்கங்களின் இயக்குநராக, "அனைத்திற்கும் மேலாக அவர் ஓர் எடுத்துக் காட்டான துறவியாக இருந்தார். இறைவனின் பிரசன்னத்தில் வாழ்ந்த பரிசுத்தமான குரு இவர்." என்று பேராசிரியர் ஆயர் எட்மண்ட் பீரிஸ் அவர்களின் கூற்று சுவாமி அவர்களின் ஆளுமையின் அற்புதமான பண்புகளை, உயர்ந்த இறையரசிற்கான இலட்சிய வாழ்வை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகின்றது.

இத்தமிழ்ப் பெருமகனின் சிறப்பினை என் அன்புக்குப் பாத்திரமான அமரர் அமுதகவிப்புலவர் 'யாழ் - ஜெயம்' அவர்கள் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் நினைவு முத்திரை வெளியீட்டின் போது 1981 ஆம் ஆண்டில் தமிழைப் பிழிந்து சாறாய்ப் பருகத் தரும் வரிகள் பின்வருவன:

"....சத்திய நெறிகண்டு சன்மார்க்க வித்திட்டு
முத்தி நகரின் முடிகண்ட மெய்ஞ்ஞானி
பாரிற் பயிலும் பன்மொழியும் ஆராய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வேரை | அகழ்ந்து | விதைகண்ட | மாமேதை |
| ஏழை | எளியவரும் | இரந்துண்ணத் | தாழ்ந்தவரும் |
| வாழ | ஒளியேற்றி | வளர்த்த | பொதுநிலவு |
| மாதுறவு | வேண்டாது | மண்பொன்னைத் | தீண்டாது |
| மாதுறவு | பூண்ட | மனிதப் | புனிதகுரு |
| நாளும் | நடமாடும் | பல்கலைசேர் | நற்கழகம் |
| வாழுந் | தலைமுறைக்கு | வாய்த்ததொரு | நூல்நிலையம் |
| அறிஞர்குழு | திரண்டு | ஆராய்ந்த | பொன்னேடு |
| நெறியிற் | பிறழாது | நிமிர்ந்துயர்ந்த | மேருமலை....." |

நிறைவாக, இம் மாமனிதன் 'மனிதப் புனிதகுரு' அமலமரித் துறவியின் வாழ்வின் வெற்றி என்ன?

வாழ்வின் வெற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக, அதன் வரையறை அமையும் என்று கூறுபவர்கள் பலர். இன்னும் சிலர். உன்னுடைய வாழ்வில், எந்த அளவிற்கு செல்வச் செழிப்பில் உயரு கின்றாயோ அல்லது பட்டங்கள் பெற்று பதவிகளில் இருக்கின்றாயோ அது உன் வாழ்வின் வெற்றி என்பர். மற்றும் சிலர், எந்த அளவிற்கு பெயரோடும், புகழோடும், பெருமையோடும் வாழ்கின்றாய் என்பதில் இருக்கின்றது என்பர்.

எனினும், **"நீ வாழ்ந்ததால் எத்தனை உயிர்கள் மூச்சு விட்டன. உன்னால் எத்தனை பேர் வாழ்வைப் பெற்றனர், வழி யைக் கண்டனர் என்பதில் உள்ளது உன் '*வாழ்வின் வெற்றி*'"** என்று எங்கோ படித்த வார்த்தைகள் உண்மையாகவே 'வாழ்வின் வெற்றி'யின் எல்லா வரையறைகளையும் வரவிலக்கணங்களையும் கடந்து எம் வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கின்றன. என்னால் 1...3....7....12......30.......70......100....... எத்தனை மனிதர்கள் வாழ்ந்தனர்?

சுவாமி அவர்களின் தயவில் பலநூறு ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்வைப் பெற்றனர் என் றால் அவரோடு வாழ்ந்தவர்களும், அவரால் வாழ்வைப் பெற்றவர்களும் சாட்சியம் கூற வரலாறும் சான்றுபகரும்.

அவ்வகையில், **வாழ்வின் பொருளினையும், அது தரும் அர்த் தத்தினையும் அதன் வழியாக வாழ்வதன் முழுமையையும், வாழ்வின் நிறைவினையும், வாழ்விப்பதில் மகிழ்ச்சியையும் கண்டவரே 'மனிதப் புனிதகுரு' சுவாமி ஞானப்பிரகாசர் ஆவார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுவாமியின் வாழ்க்கையில் மறக்க முடியாத மனிதர்கள்

- **தாய் அன்னமுத்து :** 'ஊரெல்லாம் உறங்கிக் கொண்டிருக்க ஒருத்தி மட்டும் விழித்திருப்பாளாம்' அவள்தான் தாய். அன்ன முத்துவும் இவ்வினத்தைச் சார்ந்தவளே.

- **சிறியதந்தை தம்பிமுத்துப்பிள்ளை :** சிறிய தந்தையை 'அப்பு' என்று மட்டும் அவரை எண்ணாது சுவாமி தமது 'குருநாதர்' எனக் கொண்டு காலமெல்லாம் அவர் அன்பிற்குக் கடன் பட்டிருந்தார்.

- **அருட்தந்தை எஸ். அந்தோனி அ.ம.தி :** அச்சுவேலியின் முதல் அருட்பணியாளர் சுவாமி ஞானப்பிரகாசரின் இளமைக் கால வழிகாட்டியும், இறை அழைத்தலுக்கு வித்திட்டவரும் ஆவார்.

- **அருட்தந்தை சாள்ஸ் மத்தியூஸ் அ.ம.தி :** சுவாமி ஞானப் பிரகாசரின் பாடசாலை அதிபர். சுவாமியின் நற்செய்திப் பணியில் பக்க பலமாகவும் துணையாகவும் நின்று ஊக்க மூட்டி ஒத்தாசை கொடுத்து, உற்சாகமளித்து உடனிருந்தவர்.

- **அருட்தந்தை சாள்ஸ் கொலின் அ.ம.தி :** சுவாமி அவர் களின் துறவற அழைப்பைச் செவிமடுக்கச் செய்தவர்.

- **அருட்தந்தை யூல்ஸ் கொலின் அ.ம.தி :** புனித மாட்டினார் குருமடத்தில் ஞானப்பிரகாசருக்கு முதல் அதிபராக இருந்து அழைத்தலில் ஊக்குவித்து உரமூட்டியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☺ **அருட்தந்தை சீ. ஈ. பொன்சேக்கா அ.ம.தி :** சுவாமியின் ஞான ஆலோசகரும், ஆன்மீக வழிகாட்டியும் ஆவார்.

☺ **ஆயர் யூலன் அ.ம.தி ஆண்டகை :** ஞானப்பிரகாசரின் குருத்துவப் பயணத்திலும், வாழ்விலும், நற்செய்திப்பணியிலும், தமிழ்த் தொண்டிலும் உடனிருந்து ஆதரவு கொடுத்தவர். சுவாமி ஞானப்பிரகாசரின் அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஆயர்.

☺ **அருட்தந்தை பீ. ஏ. மருசலீன் அ.ம.தி :** ஞானப்பிரகாசரின் அன்புக்குப் பாத்திரமான பிரிய நண்பர்.

☺☺☺ **கிங்ஸ் பரி தேசிகர், மகா வித்துவான் கணேசையர், சதாசிவ ஐயர், சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் சேதுப் பிள்ளை, சத்தியநேசன், குழந்தை சாமிப்பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, முதலியார் குலசபாநாதன், ஆர். நடேசபிள்ளை, பேராசிரியர் அருள்திரு. கெரசு, அருள்திரு. எஸ். ஜீ. பெரேரா, திரு. எஸ். ஜே. கிறவுதர், ஐசக் தம்பையா, கதரீன், ஆயர் எட்மண்ட் பீரிஸ் போன்ற அறிஞர்களும், பெரியோர்களும் :** ஞானப்பிரகாசர் சுவாமிகளின் அறிவியல், ஆராய்ச்சி நண்பர்கள் மட்டுமல்லாது சுவாமியின் ஆய்வுக்கும், வெளியீடுகளுக்கும் அவ்வப்போது தம்மால் இயன்ற ஆதரவையும், உதவியையும், ஒத்தாசையையும் வழங்கியவர்கள். குறிப்பாக இந்நல்லுள்ளங்களின் தாராளப் பண்பு காரணமாக சுவாமி அவர்களால் இவ்வளவு தொகையான வெளியீடுகளைச் செய்ய முடிந்தது என்றால் அதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

☺☺☺ **அருட்பணியாளர்களான ஆசீர்வாதம், வில்லியம் யேசுதாசன், பெனடிக்ற், சூசைநாதர், பிலிப், மரியாம்பிள்ளை, கருணாகரர், மதுரநாயகம், பொன்னையா போன்றவர்கள்:** நற்செய்திப் பணியில் சுவாமி ஞானப்பிரகாசரின் உடன் உழைப்பாளிகளும், நண்பர்களும் ஆவர். மிக நீண்ட காலமாகவே சுவாமி அவர்களோடு இணைந்து நற்செய்திப் பணியிலும், மேய்ப்புப் பணியிலும் தம்மை மக்களுக்காகக் கரைத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL
131270

# துணை நின்றவை


- அடைக்கலமுத்து,ச., **நெஞ்சே நினை**. சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்கை வரலாறு, யாழ். மறை மாவட்ட இலக்கியக் கழகம், 1975.

- இந்திரபாலா,(பதி), **சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்**. ஞானப்பிரகாசர் நினைவு விழா அமைப்புக்குழு, யாழ்ப்பாணம், 1981.

- சிவசாமி, வி., **சுவாமி ஞானப்பிரகாசரும் வரலாற் றாராய்ச்சியும்**. நூலகம் ஞானப்பிரகாசர் ஆச்சிரமம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 1973.

- **சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் சிறப்புமலர்**. 'கிறிஸ்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை', கொழும்பு, 1980.

- **சுவாமி ஞானப்பிரகாசர்**. தமிழ்மொழி அலுவல்கள் திணைக் களம் கொழும்பு, 1981.

- செல்வரெட்ணம், சா.ம., (தொகு.) **சுவாமி ஞானப்பிராகசர் நூற்றாண்டு நினைவு மலர்**. ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழாக் குழு, கொழும்பு, 1975.

- **நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் விழா மலர்**. நவரச நாடகாலயம், யாழ்ப்பாணம், 1969.

- **பாதுகாவலன்** பத்திரிகை ஆயர் பேரருட்திரு. எட்மன்ட் பீரீஸ் ஆண்டகை எழுதிய கட்டுரைகள் 1974 ஆம் ஆண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலைப்பற்றி...

☞ சுவாமி ஞானப்பிரகாசரீல்ப் பற்றி எரிந்த இறைத்தாகமும், பணித்தாகமும், தமிழ்த்தாகமும் இளையோராகிய எம்மை சிந்தித்து ஆர்வமுடன் செயலாற்ற அழைக்கிறது இந்நூல்.

**– செல்வன். மி. ஜெகன்குமார்**
உயர்தர மாணவன்.

☞ இந்நூல் மாணவச் செல்வங்களுக்குக் கலங்கரை விளக்கு. இது அறிவுத்தேடல் மட்டுமல்ல, மானிட வாழ்வின் உறுதிக்கான ஓர் அன்புத்தேடலும் கூட.

**– திருமதி. ஆ. ர். ஸ்ரனிஸ்லாஸ்**
ஆசிரியை.

☞ நெஞ்சுக்குள் எப்போதோ மரணித்துவிட்ட உண்மைகளின் தளத்திற்கு இந்நூல் வாசகனை இட்டுச்செல்கிறது. அத்துடன் மானிடத்தைத் தரிசிக்கும் படியான மனமுதிர்ச்சியைப் படிப்பவர்களுக்குத் தொட்டுக் காட்டுவதில் இது ஓர் அறிவுத்தேடல்.

**– கவிஞர், திரு. மு. சிங்கராயர்.**

☞ மனிதன் தவம் மீதில் இறை தந்த மொழியாகிய தமிழ் என்னும் பெயர் கொண்ட அமிழ்தினூடு ஞானப்பிரகாசர் சுவாமி செய்த விடயங்களை எமது இளம் சந்ததி அறியும் வண்ணம் தரும் அருமையான – பால் நூல் – முழுவதையும் பருகலாம்.

**–திருமதி. கோகிலா மகேந்திரன்**
வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்.

Cover Printed by: GURU Peinters, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org